30 JUN 2004

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 16 | புதன்கிழமை | (30.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 194

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் செயற்பட்டுவந்த

# கருணா அணியைச் சேர்ந்த 7பேர் விடுதலைப் புலிகளிடம் சிக்கினர்

### துப்பாக்கிகள், கைக்குண்டுகள் என்பன பறிமுதல்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இரகசியமான முறையில் செயற்பட்டுவந்த கருணா அணியைச் சேர்ந்த 7 பேர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கிகள், கைக்குண்டுகள் என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

கருணா அணியைச் சேர்ந்த 7 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டு.அம்பாறை மாவட்ட ஊடகத்துறை நேற்று மாலை அறிக்கையொன்றை வெளியிட்டது.அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இலங்கை இராணுவத்தினருடனும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனும் இணைந்து செயற்பட்டு வந்த கருணா அணியைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான திக்கோட்டை, தும்பங்கேணி ஆகிய பகுதிகளில் ஒரு குழுவாகவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான களுவாஞ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அரச நிறுவனங்களில் காசோலை மோசடி வழக்கு

### விசாரணைகள் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் காசோலை மோசடி நிகழ்ந்ததாகக் கூறப்பட்டு கடந்த வருடம் ஜூலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இம் மோசடி சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இம் மோசடி வழக்குடன் தொடர்புடையவர்களால் 1998ஆம் ஆண்டு தை மாதம் முதல் 2002ஆம் ஆண்டு மார்கழி வரையான காலப்பகுதியில் கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் தாம் கட்சியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டதை ஆட்சேபித்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

தமது செயல்களுக்கான காரணங்களைத் தெரிவிக்கப் போதிய அவகாசம் வழங்கப்படாமை, கட்சியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் விலக்கியமை ஆகியன சட்டவிரோதமான செயலென அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை கட்சியின் தீர்மானங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும், பாராளுமன்ற உறுப்பினராகத் தாம் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் இயலாத்தனத்தை ஏற்கின்றனர்

### எதிர்க் கட்சித் தலைவர் ரணில் உரை

(கொழும்பு)

13வது பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பெரும்பான்மைப் பலம் இல்லாத காரணத்தினால் பாராளுமன்றத்தைப் புறந்தள்ளிச் செயற்படுகின்றது. இத்தகைய தமது இயலாத்தனத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் ஜே.வி.பியினரும் தற்போது வெளிப்படையாக ஏற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கேகாலை நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகத் தெரிவித்து ஆட்சிப் பீடமேறிய ஜே.வி.பியினர் இன்று தங்களது பதவிகளையும் கிடைத்த வரப்பிரசாதங்களையும் பாதுகாக்கும் பொருட்டே செயற்பட்டுவருகின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிகள் பங்குபற்றும் நிகழ்வுகளில் ஒருபோதும் கலந்து கொள்வதில்லை

### அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் முடிவு

(கொழும்பு)

நாட்டின் அதி உயர் பீடமான பாராளுமன்றத்தில் ஒழுக்கக் கேடான செயற்பாடுகளின் ஈடுபட்டுவரும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் எந்தவொரு நிகழ்ச்சியிலும் நான் இனிமேல் கலந்து கொள்ளமாட்டேன்.

இப்படித் தெரிவித்திருக்கின்றார் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரான உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் ஊடகப் பேச்சாளருமான ஜீ.எல்.பீரிசை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய போதே தேரர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் மகாசங்கத்தினர் பக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தினங்களுக்கு மடு வீதி 24 மணி நேரமும் திறந்திருக்கும்

(மன்னார்)

மடுத்திருத்தலத்தின் ஆடிமாத விழாவினை முன்னிட்டு மடுவீதி இன்று முதல் மூன்று நாட்களுக்கு 24 மணிநேரமும் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்படவிருக்கின்றது.

இதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்திருப்பதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெருந் திரளான மக்கள் இத்திருவிழாவுக்குச் செல்வதினால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பக்தர்களின் நலன் கருதி மடுத் தேவாலயம் அமைந்துள்ள சுற்றாடலில் தங்குமிட சுகாதார வசதிகள் என்பன செய்யப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பண்டார வன்னியன் படை வவுனியாவில் துண்டுப் பிரசுரம்

### சமூக, தேச விரோதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

'தேசத்தின் விடுதலைக்காக சமூக விரோதிகளை அழிக்க நாம் ஒரு போதும் தயங்கமாட்டோம்'. இவ்வாறு பண்டார வன்னியன் படை என்ற பெயரில் வவுனியாவில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது, மாபெரும் தியாகங்களையும் பல்வேறு அர்ப்பணிப்புகளையும் செய்து பல நெருப்பாறுகளை கடந்து உலகமே வியக்கும் நிலையில் வெற்றியின் சிகரத்தில் நிற்கும் தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்தை அழிப்பதற்கும், ஒன்றுபட்டுள்ள தமிழினத்தை சிதைப்பதற்கும் எதிரியானவன் மேற்கொள்ளும் அனைத்து இராணுவ அரசியல் புலனாய்வு தந்திரோபாய அணுகுமுறைகளுக்கு உட்பட்டு தேசத்துரோக செயல்களிலும் சமூகவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோர் மன்னிக்க முடியாதவர்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சோல் ஹெய்ம் இன்று வன்னிக்கு

(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளார்.

நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்த விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இன்று காலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்வார். அங்கு மு.ப.11 மணியளவில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம் பெறவுள்ள இச் சந்திப்பில் எரிக்சோல் ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும் கலந்து கொள்வார்.

விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழ்ச்செல்வனுடன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கலந்து கொள்வார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது பற்றி முக்கியமாக சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது. இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த சோல்ஹெய்ம இலங்கைக்கு விஜயம் செய்த போதிலும் நிகழ்சிநிரல் பற்றிய இணக்கமின்மை காரணமாக விஜயத்தின் நோக்கம் ஈடேறவில்லை

(12ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே சுந்தரின் 5ஆம் தரமாணவர்களுக்கான புலமைப் பரீட்சை மாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

பன்னிரெண்டாம் திருவிழா



## சித்திக்க அருள்வாய்

*சர்ப்பரத் திலேறி வரும் சர்வேஸ்வரி தாயே*
*சரியும் சதங் கையொடு படா கமும் மிளிர வருவாய்*
*சந்தனம்குங் குமம் பொட்டு டன் நறுஞ் சவ்வாதுப்*
*பன்னீரும் உந்தனுக்கு எழிலூட்ட வருவாய்*

*சாதனைகள் பலபுரிய எமையாளும் நாயகி*
*சாந்தமே உருவான சக்திமிகு தயாபரி*
*முத்தமிழால் பூசித்து உன்னருள் வேண்டினேன்*
*சித்திக்க அருளுவாய் சிவசக்தி நாயகியே*

சி. கந்தையா

## அகிலம் போற்றும் நாயகியே...

*அகிலாண்ட நாயகியே நாகபு,ஷணி*
*அலைகடல் நடுவினிலே*
*அருள் பாலிக்கும் தாயே நாகபு,ஷணி*
*அர்ச்சனைகள் செய்தோம்*
*அபிஷேகம் பல செய்திடுவோம்*
*ஆராதனை செய்கின்றோம்*
*ஆட்கொண்டருள் வாய் தாயே*
*அகிலம் போற்றும் நாயகியே*

இ.பிரதாயினி
நல்லூர்.

## அணிநயினை அம்பிகையைப் பணிவோம்

*அணிநயினை அம்பிகையைப் பணிவோம்- அவள்*
*அழகுமலர்ப் பாதங்கள் சரணென்று துணிவோம்*
*பிணியாவும் எமைவிட்டுப் போகும்- பெரும்*
*பேறெல்லாம் வலியவே எமதுடமை ஆகும்!*
*-அணிநயினை...*

*விடஅரவு பூஷித்த நங்கை- அருள்*
*மிக அள்ளித் தருகுவாள் கூப்புவோம் எங்கை*
*கடல்நடுவில் பெருங்கோயில் கொண்டு- அவள்*
*கருணை மழை பொழிகின்ற காட்சியைக் கண்டு*
*-அணிநயினை...*

*புனலாகி எல்லையில் விண்ணாய், -எங்கும்*
*பொருந்தியுள காற்றாகி, விரிகின்ற மண்ணாய்,*
*கனலாகி நீக்கமற நின்று- எம்மைக்*
*காக்கின்ற சக்தி ஓம் சக்தி ஓம் என்று*
*-அணிநயினை...*

*யாவர்க்கும் அருள் புரியும் நல்லாள்-அவள்*
*அசுரனோ டமராடி உலகோம்பும் வல்லாள்*
*தேவர்க்கும் மேலான தேவி -அன்னை*
*திருவடியி லேமலர் அன்போடு தூவி,*
*-அணிநயினை...*

*சாதிமத் நிறபேதம் போக்கி- கொடிய*
*சமராடும் போக்கினைச் சகமீதில் நீக்கி*
*நீதியொடு மனிதகுலம் வாழ- நாங்கள்*
*நேர்வழியில் எங்களை நாங்களே ஆள,*
*-அணிநயினை...*

வ.சின்னப்பா
தனங்கிளப்பு.

## நாடி நிற்போம் உன்பாதம்

*நானிலம் காத்திடும் நாயகியே*
*நாகம் குடை பிடித்திடவே*
*நாமங்கள் பல நாம் கூறி*
*நாம் உனைப் போற்றிடுவோம்*
*நாடெங்கும் நலம் சூழ*
*நாடி நிற்போம் உன் பாதம்*
*நயினையம் பதியவாழும் நாயகியே*
*நாக பூஷணி தாயே அம்மா*

இ.மேகலா நல்லூர்.

# கொரிய உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் மாணவர்கள் பங்கேற்பதில் சிக்கல்

## நிலைப்பாட்டை விளக்கி மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தென்கொரியாவில் இடம் பெற விருக்கின்ற உலகளாவிய மடத்திலான உதைபந்தாட்டப் போட்டியில மன்னார் மாணவர்கள் பங்கேற்றக முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கவலை வெளியிட்டுள்ளார்.

இது விடயம் குறித்து அவர் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். விசாகலிங்கத்திற்குக கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடித்தில் ,

2001,2003 ஆண்டுகளில் உதைபந்தாட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின கீழுள்ள மன்னார் "மாவட்டத்தைச் சேர்ந்த மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை, தேசிய மட்டத்திலான உதைபந்தாட்டப்போட்டியில் முதலிடம் பெற்று மன்னார் மாவட்டத்திற்கு மாத்திரம் அல்லாமல் வடக்கு-கிழக்கு மாகாணம் முழுவதற்குமே பெருமை தேடித் தந்ததை ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

இப்பாடசாலை உலகளாவிய மட்டத்திலான போட்டியில் பங்கு பற்றத் தெரிவாகி இருப்பது, வ.கி.மா. கல்வித் திணைக்களம் பெருமை அடையவேண்டிய விடயமாகும். தென்கொரியாவில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளிலும் இவ்விளையாட்டுக் குழுவெற்றிக் கொடி நாட்டுமேயாகில் அது இப் பெருமைக்கு இன்னும் மெருகூட்டியதாகவே அமையும் என்பது தாங்கள் அறியாத விடயமல்ல.

இவ்விளையாட்டு விழா தென்கொரியாவில் யூலை20ல் இருந்து 27வரை நடைபெறவுள்ளது. ஆகவே இவர்கள் பயணிக்க வேண்டிய திகதி யூலை 17அல்லது 18ஆகும்.

இது இவ்வாறிருக்க வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் ஜூலை 17,18ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக கேள்வியுற்றதும் நாம் பெரும் அதிர்ச்சிக்குள்ளானோம்.

2001,2003 ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் வெற்றி கொண்ட மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை,இந்த வருட போட்டிகளிலும பங்குபற்றுவதை தவிர்க்கும் முகமாகவே ஏற்பாட்டாளர்களால் மேற்படி திகதிகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன என்ற அபிப்பிராயம் இங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்தியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப் பட்டுவரும் வாராந்த நிகழ்வில், நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மு.ப10.30 மணிக்கு புதிய விஞ்ஞானக் கல்வி அனுசரணையுடன் அருணாகிரி நாதர் விழா நடைபெறவுள்ளது.

இவவிழாவில் "முருகனும்- அருணகிரியும் என்ற தலைப்பில் திருமுருக கிருபானந்தவாரியாரின் பிரதம சீடரான கலாபூஷணம் டாக்டர் இரா.சிவஅன்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (உ-10)

## குரு பூர்ணிமா நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு குருபூர்ணிமா நிகழ்ச்சிகள் நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் வரை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் வைத்திய கலாநிதி உரோ. மகேஸ்வரினின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

(உ-8)

## அடிக்கல் நாட்டல்

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் முதியோர் இல்லம் அமைப்பதற்கு அடிக்கல் நட்டுவிழா இன்று நடைபெறவுள்ளது.

மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி சி. கதிரவேற்பிள்ளை அடிக்கல்லினை நாட்டி வைப்பார்.

(உ-35)


## இறைதியானம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.00மணிக்கு மௌனம் இறைதியானம் இடம்பெறவுள்ளது.

(உ-51)

# உயர் பாதுகாப்பு வலய தேவாலயத்தில் பூஜை வழிபாடு







(பலாலி)

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மயிலடி புனித அந்தோனியார் தேவாலயத்தில் விசேட திருப்பலி வழிபாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்றன.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக பல வருடங்களாக இந்தத் தேவாலயத்தில் ஆராதனைகள் எதுவும் இடம்பெறவில்லை.

தற்போதைய அமைதியான சூழ்நிலையில் இந்த ஆலயத்தில் மத வழிபாடுகளை நடத்த யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல சுசில் சந்திரபால கத்தோலிக்க மக்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த மத வழிபாடு அருட்தந்தையும் பேராயருமான நிக்லன், அருட்தந்தை ரொசான் செபத்தியான் பிள்ளை ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றன.இந்த மத வழிபாட்டில் வெல்லப்புவ பிரதேசத்தில் இருந்து வருகைதந்த சுமார் 400 க்கும் மேற்பட்ட கத்தோலிக்க பக்தர்களும் கலந்து கொண்டனர்.

பொது மக்கள் பிரவேசிக்கத் தடைசெய்யப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலய பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் நடத்தப்பட்ட ஆராதனையில் கலந்துகொண்டவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் ஒத்துழைப்பையும் இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ·ராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படாது

## சதாமின் மூத்த மகள் ரகாத் பேட்டி

(அம்மான்)

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஈராக்கில்முன் கூட்டியே இடைக் கால அரசு அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிந்தேன். இந்த ஆட்சி மாற்றத்தால் ஈராக்கில் எந்த நன்மையும் ஏற்படபோவதில்லை .ஆனால் இன்னமும் கொஞ்ச நாட்களில் ஈராக் மக்களிடையே சாதகமான வளர்ச்சி நிலை காணப்படும் என நம்புகிறேன்.

ஈராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதால் எந்த நன்மையும் ஏற்படாது என சதாம் கூசேனின் மூத்த மகள் ரகாத் கூறியுள்ளார்.

தன்னுடைய சொந்த ஊரான அம்மானிலிருக்கும் சதாம் கூசேனின் மூத்த மகள் ரகாத் ஈராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது குறித்து டெலிபோன் மூலம் நிருபர்களிடம் கூறியதாவது.

ஜூலை முதல் வாரத்தில் ஈராக் காட்டுபாட்டிலுள்ள சிறைக்கு மாற்றப்படுவாரா என்பது குறித்து எனக்கு தெரியாது.அந்த விசயம் குறித்து நான்பேச விரும்பவில்லை .ஜூலை முதல் வாரத்தில் சதாம் கூசேன் புதிய சிறைக்கு மாற்றப் படுவார் என ஈராக்கின் புதிய இடைக்கால பிரதமர் கியாத் அல்லாசி நேற்று முன்தினம் கூறினார். இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது .இவ்வாறு ரகாத் நிருபர்களிடம் கூறினார்.

ரகாத் அவரது சகோதரி மற்றும் அவர்களது 9 குழந்தைகளும் ஜூலை மாதம் இறுதி வரை ஜோர்டானில் தஞ்சம் கேட்டுள்ளார்கள் அமெரிக்க கூட்டுப்படை தாக்குதலுக்கு பிறகு முதலில் சிரியாவில் அவர்கள் தஞ்சமடைந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன் 30ம் திகதி ஈராக்கில் இடைக்கால அரசு அனுமதி கொடுப்பதாக இருந்தது பாதுகாப்பு காரணங்களுக்காக இரண்டு நாட்களுக்கு முன்பே இடைக்கால அரசுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா கூட்டுப்படை தாக்குதல் நடத்தி ஈராக்கில் ஆட்சியை கைப்பற்றியது.கடந்த ஆண்டு ஜூன் 16ஆம் திகதி முதல் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை உதவியுடன் ஈராக் நிர்வாகத்தை அமெரிக்க அதிகாரிகள் கவனித்து வந்தனர்.ஈராக் நிர்வாகத்தின் தலைவராக பவுல் பிரேமர் நியமிக்கப்பட்டிருந்தார்.இந்த நிலையில் நேற்று திடீரென ஈராக் அதிகாரிகளிடம் ஈராக் நிர்வாகத்தை பிரேமர் ஒப்படைத்தார்.ஈராக்கில் இடைக்கால அரசு அமைப்பதற்கும் அனுமதி வழங்கினார்.அனுமதி வழங்கிய இரண்டு மணி நேரத்திற்குள் பின்பு திடீரென பிரேமர் ஈராக்கை விட்டு வெளியேறி அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

இது இவ்விதம் இருக்க ஈராக்கின் இடைக்கால அரசிற்கு அதிக அதிகாரம் வழங்கியதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இங்கிலாந்து பிரதமர் ரோனி பிளேயர் ஆகியோர் வரவேற்றுள்ளனர். இதன் மூலம் தீவிரவாதிகளை தங்குதடையின்றி ஒடுக்க முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஈராக் அரசிற்கு அதிக அதிகாரம் அளித்ததற்காக நாங்கள் பாராட்டுகிறோம் .மேலும் ஈராக் தலைவர்களே இப்பொழுது பொறுப்பில் உள்ளதை ஈராக் மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இதன் மூலம் தீவிரவாதிகளின் அட்டூழியத்தை தன்னிச்சையாக ஈராக் அரசு ஒடுக்க முடியும் என்று இங்கிலாந்து பிரதமர் ரோனி பிளேயர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஈராக் பிரதிநிதிகளின் அரசிற்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.ஆட்சியின் புதிய தலைவர்கள் தீவிர வாதத்தை அடக்க ஒடுக்குவார்கள் என்று தாம் நம்புவதாக குறிப்பிட்ட புஷ் தீவிரவாதிகள் இனி ஈராக்கின் பிரதிநிதிகளைத் தான் எதிர்க்க வேண்டி வரும் என்றும் சூசகமா குறிப்பிட்டுள்ளார்.தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு இடைக்கால அரசு ஒருபோதும் இனி பணியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஈராக்கில் உள்ள தீவிவாதிகளை ஒடுக்க சிறப்பு சட்டங்கள் இயற்றப்படும். பல சட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுத்தும் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்கின்றன. இது விரைவில் முடிபுக்குக் கொண்டுவரப்படுமென நம்புகின்றோம். இவ்வாறு துணைப் பிரதமர் கூறினார். (உ)



ஜப்பான் தலை நகர் டோக்கியோவில் ஸ்பைடர் மேன் II திரைப்படம் ஜூலை 10 ஆம் திகதி முதல் திரையிடப்படுகின்றது அதை முன்னிட்டு ஸ்பைடர் மேனின் காற்றில் நிரப்பட்ட பொம்மை ஒன்று செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. அதனைத் தொட்டுப் பார்க்கும் சிறுவர்கள்.

# ஈ·ராக்கிற்கு படைகளை அனுப்ப கனடாவில் எதிர்ப்பு வலுக்கிறது

ஈராக்கிற்கு படைகளை அனுப்பக் கூடாது என்று கனடா நாட்டின் முக்கிய அரசியல் கட்சியான கன்சர் வேடிவ் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் ஸ்டீபன் ஹார்பர் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:

கனடா மிகச்சிறிய ராணுவத்தை கொண்டுள்ளது ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளில் எங்கள் நாட்டு இராணுவம் போதுமான அளவிற்கு பணியாற்றி விட்டது. ஈராக்கில் ஏற்கனவே கனடா இராணுவத்தின் ஒருபகுதியினர் தங்கி பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், அங்கு மேலும் கூடுதல் இராணுவத்தை அனுப்புவதில் அர்த்தமில்லை என்றே நினைக்கிறேன். கடந்த வருடம் அமெரிக்க கூட்டணி படையினர் ஈராக்கிற்குச் சென்றபோது நான் அதை ஆதரித்தேன்.இப்படி நான் சொல்வது சற்று முரண்பாடாக இருக்கலாம் கனடா மக்களின் உணர்வுகளை மதித்தே ஆக வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தங்கள் நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி அளிக்க முன்வர வேண்டும்என்று கனடாவை உறுப்பினராகக் கொண்ட நேட்டோ அமைப்புக்கு ஈராக்கில் விரைவில் அமையவுள்ள புதிய அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

கடந்த வருடம் ஈராக் மீது அமெரிக்கக் கூட்டணி படையினர் போர் தொடுத்தபோது ஆதரவு தெரிவித்த கனடா நாட்டின் முக்கிய கட்சித் தலைவர் ஒருவரே இப்போது படைகளை அனுப்புவதற்கு எதிர்புத் தெிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)



சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்து வட மண்டலத்தை அடைந்து அதன் உச்சக்கட்டத்தில் இருக்கும்பொழுது ஏற்படும் மிக நீண்டநாளை ஒரு விழாவாக ஜேர்மனியில் கொண்டாடுகின்றனர். மூனிச்சிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் நடைபெற்ற விழாவில் நெருப்பை [illegible] வித்தைகாட்டும் இளைஞன்.

## இறப்பைத் தடுக்க புதிய வகை மருந்து

இரத்தம் உறையாமல் தொடர்ந்தும் கசியும் நிலைக்கு (ஹீமோபீலியா)நோவோ செவன் என்ற புதிய மருந்து கண்டறியப் பட்டுள்ளது.

சர்வதேச அளவில் 400 பேரிடம் நடத்தப்பட்ட சோதனை முடிவுகள் மூலம், இம் மருந்து ஹீமோபீலியாவைக் குணப்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரச்சினை ஆரம்பமான மூன்று மணி நேரத்துக்குள் இம் மருந்தை தர வேண்டும் இதன் மூலம் உடல் உறுப்பு பாதிக்கப்படுவதையும் இறப்பதையும் தவிர்க்க முடியும். ஹீமோபீலியாவினால் உலக அளவில் ஆண்டுதோறும் 20 லட்சம் பேர் இறக்கின்றனர். அமெரிக்காவில் ஆண்டு தோறும் 80 ஆயிரம் பேர் இறக்கின்றனர். (உ)

## விமானம் மீது தாக்குதல்

ஈராக்கிலிருந்து புறப்பட்ட அவுஸ்திரேலிய விமானத்தின் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் அதில் பயணம் செய்த அமெரிக்கர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி விமானம் அமெரிக்கத்துருப்புகளை ஏற்றி இருக்கும் பணியில் வழமையாக ஈடுபட்டு [illegible] து.

## உலக தரிசனம்

# ஈ·ரானில் அணுத்திட்டம் இல்லை என்று மறுப்பு

(நியூயோர்க்)

இரகசிய அணுவாயுத உற்பத்திகளை ஈரான் நடத்திவந்ததாகக் கூறப்படுகின்ற லெரிஷான் பகுதியில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி நிறுவனப் பரிசோதகர்கள் சோதனைகளை நடத்தியுள்ளார்கள்

இந்தப்பகுதியில் அணுவாயுததிட்டத்தை ஈரான் இரகசியமாக பேணிவந்ததாக, அமெரிக்கா சந்தேகம் வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து சோதனைகள் நடத்தப்பட்டன. பரிசோதகர்கள் குழுவிற்கு சர்வதேச அணு சக்தி நிறுவனத்தின் தலைவர் மொஹமட் எல்பரடே தலைமை தாங்கியிருந்தார்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போது லெரிஷான் சூழலில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டதாக எல்ப:ராடே கூறியுள்ளார்.

அணுவாயுதத் திட்டம் இருப்பதாக கருதப்படுகின்ற மற்றும் சில இடங்களுக்கு,நேற்று விஜயம் செய்து சோதனைகளை நடத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் லெரிஷான் பகுதியில் அணுத்திட்டம் இருப்பதாகக் கூறப்படுதனை நிராகரித்துள்ள ஈரான் அங்கு ஆயுதத் திட்டம் எதுவும் இல்லை என்றும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண

# சம்பியன் பட்டம் மட்டு அணிக்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைகளத் தினரால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கால்பந்தாட்ட இறுதிப போட்டியில் யாழ்.மாவட்ட அணியை மட்டக்களப்பு மாவட்ட அணி 2:0என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியன்பட்டத் தைத் தனதாக்கிக்கொண்டது.

கடந்த 26,27,28ஆம் திகதி களில் மனனார் மாவட்ட பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ் மாகாணமட்ட கால்பந் தாட்ட போட்டிகளின் முதல் சுற்றுப் போட்டிகளில் அம்பாறை மாவட்ட அணியை 5:0எனற கோல் கணக்கில் வெற்றிகொண்ட யாழ்.மாவட்ட அணி அரையி றுதிப் போட்டியில் திருகோண மலை மாவட்ட அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக் குத் தெரிவாகினது.

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு ஏறபடுத்தப்பட்ட பின் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட கால பந்தாட்ட அணி இறுதிப் போட டிக்கு முன்னேறியது இதுவே முதல்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட அணி தமது முதல் சுற்றுப் போட்டியில் பலம்மிக்க மன்னார் மாவட்ட அணியைத் தோற்கடித்ததுடன், அரையிறு திப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியையும் தோற் கடிதது இறுதிப் போட்டிக்கு முன் னேறியிருந்தது.

தொடர்ந்து நேற்று முனதி னம் நடைபெற்ற இறுதிப் போட்டி யில் யாழ்.மாவட்ட அணியை 2:0என்ற கோல்கணக்கில் தோற கடித்து வடக்கு-கிழக்கு மாகாணச் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்ட அணி தெரிவாகியது. (உ-68)


போர்ச்சுகலின் போர்ட்டோ நகரில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற ஐரோப்பியக் கோப்பை கால்பந்தாட்டத்தை ரசிக்கும் செக். குடியரசு, டென் மார்க் ரசிகர்கள்

# மே.இ.தீவுகள் அணிக்கு

# கப்டன் லாரா ஆலோசனை

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் முத்தரப்புத் தொடரில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி




விட்டதன் காரணமாக மொதத மாக இருந்துவிடக்கூடாது என்று மே.இ.தீவுகள் வீரர்களை கப் டன் பிறையன்லாரா எச்சரித் துள்ளார்.

இங்கிலாந்து, நியூஸிலாந்து மற்றும் மே.இ.தீவுகள் அணி களுக்கு இடையேயான முத் தரப்பு தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் நியூஸிலாந்து-இங்கிலாந்து, மே. இ.தீவுகள்-நியூசிலாந்து அணி களுக்கு இடையேயான முதல் 2 போட்டிகள் மழையால் ரத் தான நிலையில் இங்கிலாந்து மே.இ.தீவுகளுக்கு இடையேயான 3-வது போட்டி நேற்று முன் தினம் டிரனட் பிரிட்ஜில் நடை பெற்றது.

இந்தப் போட்டியில் 7விக்கெற் றுக்கள் வித்தியாசத்தில் மே. இ.தீவுகள் அபார வெற்றி பெற் றது. இந்த வெற்றியின் காரண மாக மெத்தனமாக இருந்துவிடக கூடாது என்று மே.இ.தீவுகள அணி வீரர்களை லாரா எச்சரித் துள்ளார். இந்த தொடரில் இன னும் நிறைய போட்டிகள் நடை பெறவிருப்பதால் இந்த வெற்றி யுடன் திருப்தி அடைந்துவிடக் கூடாது என்று லாரா கூறியுள்ளார்.

இந்த முத்தரப்பு தொடரில் இங்கிலாந்து, மே.இ.தீவுகள அணிகள் வரும் வியாழக்கிழமை ஹெட்டிங்லீயில் நடைபெறும் பகலிரவு போட்டியில் மோத வுள்ளன. வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

# கே.சி.சி.சி.விளையாட்டுக்கழகம்

# வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது

கொக்குவில மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகத் தால் நடாத்தப்பட்டு வருகின்ற கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் கடந்த ஞாயிறன்று காலை நடை பெற்ற கால் இறுதிப் போட்டி யில் ஸ்ரான்லி வி.கழகத்தை எதிர்த்து விளையாடிய கே.சி. சி.சி.வி.கழகம் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி வி.கழகம் 22.2 ஓவர் களில் சகல இலக்கினையும் இழந்து 98ஓட்டங்களைப்பெற் றது.

துடுபபாட்டத்தில் செல்வராஜா 23 ஓட்டங்களையும் றொகான் 12 ஓட்டங்களையும் பெற்றனர். கே.சி.சி.சி.வி.கழகம் சார்பில் பந்து வீசிய எஸ.உமாநாத்-3, எஸ்.கிருபவன்-3, ரி.கிரகாஸ்-2 என்.நதீஸ்வரன்-2இலக்கினை யும் கைப்பற்றினா.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சீ.கழகம் 14.3ஓவர்க ளில் விக்கெற இழப்பின்றி 103 ஓட்டங்களைப்பெற்றது. துடுப் பாட்டத்தில் சி.மதுசன்-45, என்.பிரதீபன்-44ஓட்டங்களைப் பெற்றனா.

மாலையில் நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் சென்ற லைட்ஸ் வி.கழகத்தை எதிர்த்து விளையாடிய பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 30ஓவர்களில் 7இலக் கினை இழந்து 178ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சுதர்சன்-49, பிருந்தாபன்-41, ஓட் டங்களையும் பெற்றுக்கொடுத் தனா. பந்துவீச்சில் பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த அருள் 3 இலக்கினைக் கைப்பற்றி னார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தா டிய பல்கலைக்கழக அணி 28 ஓவர்களில் 3இலக்கினை இழநது 181ஓட்டங்களைப் பெற் றது. துடுப்பாட்டத்தில் சர்வா-60, ரஜீவன்-37, கௌரிபாகன்-34, யதார்த்தனன்-31 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் நிசாகரன் 11, ஜொகான் 1, பிரகாஷ்-1 இலக்கினைக் கைப்பற்றினர்.

(உ)


சனிக்கிழமை நடைபெற் ற மகளிர் 3வது சுற்றுப் போட்டிகள் மழையின் காரணமாக தள்ளி வைக்கப்பட்டு ஞாயிற்றுக் கிழமை நடந்தது. இப்போட்டிகளில் பிரான்ஸ் நாட்டின் நாத் தல்லி டேச்சியை 7–5, 6–1 என்ற நேர்செட்களில் அமெரிக் காவின் ஜெனிபர் கேப்ரியாட்டி (7) வென்று விம்பிள்டன் 4 வது சுற்றுக்குத தகுதிபெற்றார்.

# விம்பிள்டன் காலிறுதியில்

# குரோஷிய வீராங்கனை

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் காலிறுதி ஆட்டத் துக்கு முன்னேறி சிறப்பு பெற் றுள்ளார் 19வயதாகும் குரோ ஷிய மங்கை கரோலினா ஸ்பிரெம்.

இவர் கிராண்ட்ஸ்லாம் போட்டி யில் காலிறுதிக்கு முன்னேறு வது இதுவே முதல்முறை.

நேற்று முன்தினம் நடை பெற்ற 4-வது சுற்று ஆட்டத் தில் கரோலினா 6-4,6-4 என்ற நோசெற்களில் 21-வது நிலை வீராங்கனை மாக்தலீனா மலீ வாவைத் (பல்கேரியா) தோற் கடித்தார்.

ஒருமணி நேரம் இந்த ஆட் டம் நீடித்தது. 30-வது நிலை யில் உள்ள கரோலினா தனது முநதைய சுற்றுக்களில் வீனஸ் வில்லியம்ஸ், 32-வது நிலை வீராங்கனை மேகன் ஷாகுனெஸ்ஸி ஆகியோரைத் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

மறறொரு ஆட்டததில் பிரான்ஸ் வீராங்கனை தாதியானா குளோ வின் 6-3,2-6,6-3என்ற செட்க ளில் சுவிட்சர்லாந்தின் இம் மானுவேல் காக்ரியாடிலைத் தோற்கடித்து 4-வது சுற்றுக்கு முன்னேறினார்.

(உ)

# விளையாட்டுச் செய்திகள்




ஒலிம்பிக்கிற்கு இன்னும் 44தினங்கள்


கலிபோர்னியாவில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதிச் சுற்று நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலிய கசகஸ்தான் வீராங் கனைகள் பங்குகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல: 08

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

1) த.கௌரி - வல்வை மகளிர் மகா வித்தி.
2) வி.திருக்குமரன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
3) யோ.ஜெரோம் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
4) ஆ.அனஸ்ரிக்கா - உடுவில் மகளிர் கல்லூரி.
5) பா.அனித்தா - வட இந்துமகளிர் கல்லூரி.
6) பா.ஜனோஜன் - சங்கானை அ.மி.த.க. பாடசாலை.
7) ப.மயூரன் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
8) செ.பிரம்மிக்கா - யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தி.
9) மே.ஜெய்கரன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
10) கு.நிலக்ஷன் - யா/ பெரியபுலம் மகாவித்தி.
11) யோ.ஜெரோஷன் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
12) சி.ஜெதீசன் - உசன் இராமநாதன் மகாவித்தி.
13) யோ.வசந்தா - கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தி.
14) சு.கபிதா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
15) இ.வைஷ்ணவி - யா/ பெரியபுலம் மகாவித்தி.
16) ச.தர்சிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
17) அ.சுபேதன் - துன்னாலை காசிநாதர் வித்தி.
18) ந.நவிந்தன் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
19) க.கிருஷாயினி - வட இந்துமகளிர் கல்லூரி.
20) ச.கௌசிகா - சாவக்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
21) வி.கிஸ்ணதீபா - நயினாதீவு நாகபூஷணி வித்தி.
22) வி.பிரவீனா - நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை
23) கே.சிவாகரன் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
24) தே.சுஜீதன் - திருநெல்வேலி இ.த.க. பாடசாலை.
25) ஜெ.மதிசூதன் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
26) சோ.கோபிஷாந் - கோப்பாய் நாவலர் மகா வித்தி.
27) செ.கஜானன் - உசன் இராமநாதன் மகா வித்தி.
28) ர.டில்சான் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.
29) பி.ஜோதிகா - வல்வை சிவகுரு வித்தி.
30) நி.நிருஷாந் - நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க. பாடசாலை.
31) வி.முகுந்தன் - நெல்லியடி மெ.மி.த.க.
32) சு.நீதிசன் - யா/மத்திய கல்லூரி.
33) க.லக்சன் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
34) ச.சிந்துஜா - அராலி சரஸ்வதி மகாவித்தி.
35) இ.தனுசியா - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
36) க.மேரி ஜஸ்ரினா - வல்வை மகளிர் மகாவித்தி.
37) த.தபோஜனன் - இணுவில் மத்திய கல்லூரி.
38) சு.கீர்த்தனா - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
39) பு.வினஜா - வல்வை விநாயகர் வித்தி.
40) செ.தேனுகா - ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தி.
41) செ.கோகிலன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
42) மா.வஜிதா - ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை.
43) ஸ்ரீ.கஜேன் - யா/மத்திய கல்லூரி.
44) மு.தனுஜா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
45) பி.லக்சிகா - வல்லை அ.மி.த.க பாடசாலை.
46) ப.சதீஸ்குமார் - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
47) ப.பகிஷா - மாதகல் விக்கினேஸ்வரா வித்தி.
48) ப.ஆதிரை - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
49) ப.சித்தாரா - நுணாவில் அமிர்தாம்பிகை வித்தி.
50) சி.கிருஷ்ணப்பிரதாப் - கரவெட்டி மாணிக்கவாசகர் வத்தி.
51) ந.பாலமோகன் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
52) க.கர்ஜிகா - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
53) சி.துளசிகா - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி.
54) தெ.கனிஸ்டன் - கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை.
55) அ.அன்ரனி பிளின்ரன் - யா/மத்திய கல்லூரி.
56) பி.ஸ்ரீசபிக்கா - யா/திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தி.
57) நா.பகிர்ராஜ் - திருநெல்வேலி இ.த.க பாடசாலை.
58) தி.சஜீத்ரா - தம்பசிட்டி மெ.மி. பாடசாலை.
59) ஜோ.ஜீவாகன் - நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை.
60) லோ.சுஜிதா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.
61) ஜெ.திவ்ஜன் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
62) சி.சிவதர்சன் - புற்றளை மகா வித்தி.
63) வி.தினேஸ் - யா/மத்திய கல்லூரி.
64) செ.ஆன்டனியா - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி.
65) மயூரிஜெனா - வல்வை றோ.க.த.க பாடசாலை.
66) சு.சுமேனன் - தேவரையாளி இந்துக் கல்லூரி.
67) ச.வமனா - உசன் சைவத் தமிழ் வித்தி.
68) பொ.கம்சாயினி - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி.
69) ற.திஷானா - உடுவில் மகளிர் கல்லூரி.
70) ச.நிவேதிதா - திருக்குடும்பக் கன்னியர் மடம்.
71) த.யதுர்ஷன் - யா/பெரியபுலம் மகா வித்தி.
72) அ.சாம்பவி - கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.
73) எஸ்.கஜசுமனி - உசன் இராமநாதன் மகா வித்தி.
74) ஐ.லாவண்யா - உசன் இராமநாதன் மகா வித்தி.
75) ர.கவில்ராஜ் - யா/தம்சிட்டி மெதடிஸ் மிசன் வித்தி.
76) ர.செந்தாமன் - உடுப்பிட்டி அ.மி. வித்தி.
77) த.குருபரன் - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
78) ச.கிருஷாந் - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.
79) சி.சிறீவிந்துஜன் - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
80) யு.பயிந்தன் - உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
81) கோ.சுதர்சன் - நாவாலி மகா வித்தி.
82) ச.வர்மினா - உசன் இராமநாதன் மகா வித்தி.
83) த.டினா - உசன் இராமநாதன் மகா வித்தி.
84) கெ.தஜீவன் - உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
85) சி.துளசிகா - யா/இந்து மகளிர் ஆரம்ப்ப் பாடசாலை.
86) க.மாதுளன் - யா/பரியோபான் கல்லூரி.
87) பா.பாலகோபி - கோப்பாய் நாவலர் பாடசாலை.
88) இ.ஜெயப்பிரியா - தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி.
89) கு.சலோமிசரணியா - யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
90) நி.கஜகோகிலன் - தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி.
91) ப.பிரவீனா - நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை.
92) தெ.அனுசா - சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை.
93) ஸ்ரீ.அபிராமி - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
94) பா.பாலபத்மன் - புற்றளை மகா வித்தி.
95) செ.சாருஜா - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
96) நி.நிவேதா - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
97) சௌ. ராஜகுமாரி - வல்வை சிவகுரு வித்தி.
98) ச.லக்சிகா - திருநெல்வேலி இ.த.க. பாடசாலை.
99) இ.சிந்துஜா - மானிப்பாய் சோதிவேம்படி வித்தி.
100) வி.டினேஸ் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
101) ரா.திவாகர் - வல்வை விநாயகர் வித்தி.
102) கு.கஜனன் - உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை.
103) தி.கோகுலன் - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
104) கு.ஜனாத்தன் - மானிப்பாய் சோதிவேம்படி வித்தி.
105) பா.ஜெயராம் - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.
106) இ.மயூரெதன் - உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.
107) க.லக்ஷனா - துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
108) ஜே.சாளினி - உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
109) சோ.சோபிதாஸ் - யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.
110) த.உஷாந்தினி - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.
111) க.மயூரிகா - வசாவிளான் மத்திய மகா வித்தி.
112) த.விதுஷா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
113) சி.சிவதர்சன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.
114) க.ரமனுஜா - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.
115) மா.கஜலக்ஷி - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
116) கு.டயந்தன் - யா/மத்திய கல்லூரி.
117) கு.கீர்த்திகா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
118) ம.விதுரா - கிளிநொச்சி இராமநாதபுர மகா வித்தி.
119) இ.கிருபாகரன் - துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை.
120) சி.ஆரணி - யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
121) வ.இலக்ஷனா - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
122) தே.வஜேதன் - சங்கானை சிவ்ப்பிரகாச மகா வித்தி.
123) சே.திவாகரன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
124) ஜோ.டொனோல்ட் - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.
125) ர.சல்மியா - உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
126) க.தபோதரன் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.
127) சி.கவிதா - அராலி சரஸ்வதி மகா வித்தி.
128) க.தயானா - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
129) ச.சரணிகா - புன்னாலைக் கட்டுவன் அ.த.க. பாடசாலை.
130) தூ.பேணாட்ரிஷாந்த் - யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.
131) வ.நிலோஜன் - யா/நாவாந்துறை றோ.க வித்தி.
132) வி.ஐஸ்வர்யா - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
133) உ.நிசாந்தன் - புன்னாலைக்கட்டுவன்.
134) ம.கோகுலன் - சங்கானை சிவப்பிரகாசம் வித்தி.
135) தே.ஜீவிதா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
136) ஜெ.அரணபவன் - யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தி.
137) வே.விதூஷன் - சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தி.
138) சி.அனோஜன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
139) பா.பார்த்தி - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட.
140) யோ.ஜஸ்மியா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட.
141) ஜெ.கோவர்த்தனி - குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தி.
142) லோ.கஜனா - பண்டத்தரிப்பு மகளிர் உ.த. பாட.
143) உ.கோபிராஜ் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
144) ஜெ.பவதாரணி - கோப்பாய் நாவலர் வித்தி.
145) கெ.தர்சன் - உடுவில் மகளிர் கல்லூரி.
146) அ.லொயிடன் - உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
147) ஜெ.ஜெயலதன் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி
148) லோ.றொபின்ஸ்கமில்டன் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
149) இ.யூட்ஜெனிஸரா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட.
150) பூ.டொறத்தி - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
151) சே.டிசோன் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
152) யோ.கெஸ்மிஜா - யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
153) சி.சர்மிகா - மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை.
154) ம.வாகீசன் - யா/மத்திய கல்லூரி.
155) ஜே.ஜீபிகா - யா/மத்திய கல்லூரி.
156) சி.சஞ்சீவன் - கோப்பாய் நாவலர் மகா வித்தி.
157) கு.அருட்குமரன் - யா வேதாரனியேஸ்வர வித்தியாலயம்.
158) ஆ.தர்சிகன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
159) இ.லக்சன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
160) ர.கயூர்ணா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
161) டா.பிரகாஷ் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
162) ஜெ.நிந்துஜா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
163) மோ.மதுஜா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
164) தி.கதீபன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.
165) ம.வதனி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
166) வி.பிராசாந் - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
167) எஸ்.துவாகரன் - புன்னாலைக்கட்டுவன்.
168) ம.ரஜீத் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
169) தி.சங்கீதா - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி.
170) சு.ரிசாந்தருபன் - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
171) க.ஜசீபன் - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
172) தே.பயிரவி - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
173) சி.விஸ்னுப்பிரதாப் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
174) பி.பிரசாந் - யா/மத்திய கல்லூரி.
175) சி.சியாட்ஜென்னி - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
176) து.திபாகரன் - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
177) யோ.சாருஜன் - யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தி.
178) பு. லதுஷா - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**குறிப்பு :**
அன்பு மாணவர்களே! உங்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கான விடையை எழுதும்போது, விடைக் கான இலக்கங்களையும், பாடசாலையின் பெயரை யும், உங்கள் பெயரையும் தவறாது எழுதுங்கள். எழுதத் தவறும் இடத்து உங்கள் பெயர் பிரசு ரிக்கப்படமாட்டாது என் பதை மிகவும் வேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

**5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் ~10**

மாணவர் முழுப்பெயர்: ........................................

பாடசாலை முகவரி : ........................................

வீட்டின் முகவரி : ........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 05.07.2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி





குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக் கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்ப ... வினா இலக்கங்களை சரியா கக் குறிப்பிடவும். பாடசாலையின்

## சுந்தர் வெளியீடு வினாத்தாள் 08 விடைகள்

### வினாத்தாள் II

01. i) கலப்பை
ii) களனி
iii) விண்வெளி
iv) சந்திரன்
02. i) போ
ii) இந்த
03. i)Moon
ii) Cart
04. i) விண்கலம்
ii) உழவு இயந்திரம், ரட்டர்
iii) ஏர் இற்கு பதில் இயந்திரம் பயன்படுத்தப்பட்டமை
iv) இயற்கை எருவிற்கு பதில் செயற்கை உரப்பாவனை, வண்டிபபோக்கு வரத்திற்கு பதில் விமான / வாகன போக்கு வரத்து.
05. i) சந்தையில் பழங்கள் வாங்கினேன்
ii) நாய் குரைத்தது
iii) பாடசாலைக்கு மாணவர் பலர் சமுகமளிக்கவில்லை
06. i) நீல்ஆம்ஸ்ரோங்
ii) சுக்கிரன்
iii) மஞ்சள்
iv) ஆங்கிலம்
v) சிங்களம்
07. ஒருமை - மாம்பழம், கடிதம்
பன்மை - மாம்பழங்கள், கடிதங்கள்
இறந்த காலம் - படித்தான், எழுதினாள்
நிகழ் காலம் - படிக்கின்றாள், எழுதுகின்றாள்
எதிர்காலம் - படிப்பாள், எழுதுவாள்
08. i) சீமெந்து வேலை
ii) மரவேலை, தச்சுவேலை
iii) இரும்பு வேலை
iv) தையல் வேலை
09. i) (2)
ii) (2)
iii) (2)
iv) (1)
v) (4)
vi) (3)
vii) (2)
viii) (1)
ix) (1)
x) (4)
xi) (2)
xii) (3)
xiii) (2)
xiv) (3)
xv) (1)
10. i) சரி
ii) சரி
iii) பிழை
iv) சரி
v) சரி
11. i) சிங்களவர்
ii) தமிழர்
iii) பறங்கியர்
iv) இஸ்லாமியர்
12. i) நான்முகி
ii) உருளை
iii) கூம்பு
13.

| | உரு 1 | உரு2 | உரு3 |
|---|---|---|---|
| விளிம்புகள் | 6 | 2 | (வளைந்தது) 1 |
| உச்சிகள் | 4 | 0 | 1 |
| முகங்கள் | 4 | 2 | 1 |

14. 


15. i) 8
ii) 8
16. i) பிரபாகர்
ii) சுதாகர்
17. ரூபா 3000.00
18. 32 kg
19. 21
20. 14 cm
21. 22 cm
22. 1268ml OR 1l 268 ml
23. சாயி
24.
- ♠ எழுத்துப் பிழைகளின்றி இருத்தல்.
- ♠ கூறியதுகூறலாக இருக்கக் கூடாது.
- ♠ தலைப்பிற்குப் பொருத்த மானதாக இருக்க வேண்டும்.
- ♠ எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனமும் சிந்தனையும்

ஒருவரைப் பார்த்து உனது நண்பர்கள் யார் என்று கேள்வி கேட்டுப்பாருங்கள் கொஞ்சம் யோசித்து யோசித்துப் பதில் சொல்வார். அவரிடமே "உனது எதிரிகள் யார்?" என்று கேளுங்கள் கடகடவென்று ஒப்பிப்பார்.

நமது மனது எப்படிப்பட்டதென்றால் நமது நண்பர்களை விட எதிரிகளை நன்றாக நினைவில் வைத்திருக்கும். இது ஒரு ஆச்சரியமான உண்மை. உங்களால் நண்பர்களை மறந்து விடமுடியும். ஆனால் எதிரிகளை மறந்து விட முடியாது. இது ஒரு வேடிக்கையான நிலைதான்.

அழகான தருணங்களை நாம் ஏன் மறந்து விடுகிறோம் இது இயற்கை. ஏனென்றால் நமது மனம் மலர்களைக் கவனிப்பதில்லை. முட்களைத் தான் கவனிக்கும். தன்னைக் காயப்படுத்தும் எதையும் அது உடனே கண்டுகொள்ளும். ஒரு தெளிந்த சிந்தனையுடைய மனம் மிக அழகாக உள்ள எல்லாவற்றையும் கவனிக்கும். தான் நன்றியுடன் உணரக் கூடிய எல்லாவற்றையும் பார்த்துக் குறித்துக் கொள்ளும். இப்படிப் பட்டவர்களின் வாழக்கை இயல்பாகவே நன்றாக அமையும். மனதிலுள்ள ஒரு சிறிய அமைப்பை மாற்றுவதைப் பொறுத்துத்தான் இந்த விஷயம் என்கிறார் ஓஷோ.

ஒரு யூதக் கோயில் இருந்ததாம். அது யூதர்களின் மடமாகவும் இருந்து. அங்கே ஒரு தலைமைக்குரு அவர் மிகவும் கண்டிப்பானவர். அந்தக் கோவிலை யொட்டி ஒரு தோட்டம். ஒருநாள் காலையில் அந்தத் தோட்டத்தில் இரண்டு இளம் யூதர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். காலையில் ஒரு மணிநேரமும் மாலையில் ஒருமணி நேரமும் அவர்களுக்கு அங்கு நடக்க அனுமதி உண்டு. மற்றைய நேரங்களில் அவர்கள் மதப் புத்தகங்களைப் படிக்க வேண்டும். பிறவிதி முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த இரண்டு பேருமே தொடர்ந்து புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்கள். ஆனால் கோவில் மடத்தில் இருக்கும் போது அவர்கள் புகைபிடிகக முடியாது அது கடுமையான குற்றம். "சரி நாம் தோட்டத்திலருக்கும் போதாவது புகைபிடிக்கலாமா?" என்று ஒரு ஆசை அவர்களிருவருக்குமே இருந்தாலும் பயம் இப்படிக் கேட்டால் மதகுரு என்ன செய்வாரோ என்னும் பயம்.

இப்படிக் கொஞ்ச நாள் ஆனது. ஒரு நாள் அந்த இரண்டு பேரிலும் ஒருவன் மிகவும் கலங்கிப் போய் அந்தக் கோவிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். வந்தவன் நேராக தோட்டப் பக்கம் சென்றான். அங்கே இன்னொருவன் ஆனந்தமாகப் புகைபிடித்துக் கொண்டிருந்தான் அதைப்பார்த்ததும் இவனுக்கு அதிர்ச்சி "அடக்கடவுளே! என்ன இது ந கேட்டகாமல் ஆரம்பித்து விட்டாயா?" என்றான் "இல்லையே! நான் கேட்டு விட்டேன்" என்றான் அவன். அப்படியா? என்ன மனிதர் இவர் நானும்தான் கேட்டேன் என்னைக் கன்னா பின்னா வென்று திட்டி விட்டார் இது என்ன கோவிலா நரகமா? உனக்குப் புகைபிடிக்க ஆசையாக இருந்தால் நரகத்திற்குப் போ என்றார். உன்னை மட்டும் எப்படி அனுமதித்தார் என்று கேட்டான இவன். அவனும் சிரித்துக் கொண்டே 'நீ எப்படிக் கேட்டாய்?" என்றான். நாம் இந்தத் தோட்டத்திற்கு வர அனுமதிக்கப் பட்டிருப்பதே ஜெபத்திற்காகத்தானே அதனால் நான் ஜெபம் சொல்லும் போது புகை பிடிக்கலாமா?' என்று கேட்டேன அதுதான் அவர் சத்தம் போட்டு என்னை அடிக்கவே வந்து விட்டார்" என்றான். இவன் "நீ ஒரு மாதிரியாகக் கேட்டிருக்கிறாய் நான் வேறு மாதிரியாகக் கேட்டேன். ஜெபம் சொல்லும் போது புகைப்பிடிக்கலாமா?" என்று நீ கேட்டிருக்கிறாய் 'ஐயா!. புகைப் படிக்கும் போது ஜெபிக்கலாமா?' என்று நான் கேட்டேன் அதில் தவறு ஏதுவும் இல்லை" என்று பதில் சொன்னார் என்றார்.

ஒரு சிறுமாற்றம் தான் அதுமிகப் பெரியமாறுதலை ஏற்படுத்திவிடும். மனம் நல்ல விதமாக சிந்திக்க ஆரம்பித்து விட்டால் மகிழ்ச்சிக்குப் பஞ்சமில்லை. ஒருகஞ்சன் ஆற்றில் விழுந்து விட்டான். வெள்ளத்தில் தத்தளித்துக்கொண்டிருந்தான். கரையில் நின்ற ஒருவர். "உன்கையை இப்படித்தா. இழுத்துக் கரை சேர்க்கிறேன்" என்றார். எதையும் கொடுத்துப் பழக்க மற்ற அவன் கையைக் கொடுக்கமாட்டேன் என்று விட்டான். இவர் பார்த்தார். உன்னையைக் கொடு என்று சொல்வதற்குப் பதிலாக "நான் என் கையைக் கொடுக்கிறேன் பி டி" என்றார். 'கப்' என்று பிடித்து விட்டான். இழுத்துக் கரையில் போட்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து

## பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதிசேகரிப்பதை ஒழித்துக்கட்ட வேண்டும்

### தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவைப் போல் நீண்ட காலமாக பயங்கரவாத நடவடிக்கைகளினால் இலங்கையும் பாதிக்கப் பட்டிருப்பதால் இவ்விரு நாடுகளும் பயங்கர வாத அமைப்புகள் தமது நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்கும் செயலை முற்றாக ஒழித்துககட்ட முனைப்புடன் ஈடுபடவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டன் .

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அமெரிக்காவிலும் இலங்கையிலுமே பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகரித்து வருகின்றது.

பயங்கரவாதிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் முதலில் அவர்களுக்கு நிதி சேகரித்துக் கொடுக்கும் செயல்களைக் கட்டுப்படுத்தவேண்டும்.

இந்த விடயத்தில் அமெரிக்கா மிக விழிப்பாக இருந்து வருகின்றது என்று குறிப்பிட்ட அமெரிக்கத் தூதுவர் இலங்கையில் தற்போது சமாதான சூழல் நிலவி வருவதாகவும் இதனைதாம் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.(உ-60,10)

# முன்னாள் ஆளுநர் அசோகா ஜெயவர்த்தன

## பிரதம படைத்துறை அதிகாரியாகத் தெரிவு

(கொழும்பு)

பிரதம படைத்துறை அதிகாரியாக வடக்கு- கிழக்கு மாகாண சபையின் முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படைத்தளபதியாகவும் பிரதம படைத்துறை அதிகாரியாகவும் கடமையாற்றி வந்த லயனல் பலகல்லவின் பதவிக்காலம் எதிர்வரும் முதலாம் திகதியுடன் முடிவடையவுள்ளதையடுத்து, படைத்துறை அதிகாரிக்கான பதவிக்கு மேஜர் ஜெனரல் சாந்த ஹொட்ட கொட நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பிரதம படைத்துறை அதிகாரிப் பதவிக்கு கடறபடைத் தளபதி தயா சந்தகிரியை நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

ஆனால் இப்பதவிக்கு ஓய்வு பெற்ற சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமிப்பதே பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் அசோகா ஜெயவர்த்தனவை ஜனாதிபதி நியமிக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பல்வேறு நாடுகளிலும் முப்படைகளுக்குமான தளபதியாக சிரேஷ்ட படைத்துறை அதிகாரி ஒருவரே நியமிக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-121)

# இராசி பலன்

**30.06.2004**
**(ஆனி 16,புதன்கிழமை)**
**திரயோதசி மு.இ.10.14.வரை**
**அனுசம் பி.ப. 2.45 வரை**
**இராகுகாலம் 11.56-1.26 வரை**
**சுபநேரம் 4.26-5.56 வரை**
**பிரதோச விரதம்**

**மேடம்**
அமைதிக் குறைவு, எதிர்பாராத மனஸ்தாபம், உடல்நிலைக்குறைவு, வாகன பயம்.

**இடபம்**
நல்ல வரவேற்பு,புதிய முயற்சி, உடல் நலம், பிரயாண நன்மை.

**மிதுனம்**
தடைப்பட்ட காரியம், கைகூடும், போசன நன்மை, கெளரவமான நிலை, உற்சாகம்.

**கடகம்**
வியாபார நன்மை, வாக்கு மேன்மை, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
மாதாசுகம்,கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், காரிய தாமதம்.

**கன்னி**
கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
வீண் வார்த்தை, தொழில் கஷ்டம், காரிய தாமதம், தன வீரயம்.

**விருச்சிகம்**
தெய்வசிந்தை, நண்பர்கள் உதவி, புதிய முயற்சி, உற்சாகம்.

**தனுசு**
காரிய அலைச்சல், நண்பர்கள் மனஸ்தாபம், அமைதிக் குறைவு, தன வீரயம்.

**மகரம்**
கீர்த்தி, தொழிலில் ஆர்வம், பிரயாண நன்மை, காரிய சித்தி.

**கும்பம்**
தொழில் முன்னேற்றம், நல்ல செய்தி, அதிகாரம், போசன நன்மை.

**மீனம்**
சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வள்ளுவன்

## அரசாங்க அச்சகத்தில் ஏற்பட்ட

# தீ விபத்துக்கு மின்ஒழுக்கு காரணமல்ல

### மறுக்கிறார் அச்சக அதிபர்

(கொழும்பு)

கொழும்பு பொரளை அரசாங்க அச்சகத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்திற்கு கவனயீனம் அல்லது நாசகார வேலையே காரணமாக இருக்கலாம் என அச்சக அதிபர் நெவில் நாணயக்கார சந்தேகம் எழுப்பியுள்ளார்.

மின்சார ஒழுங்கினால் தீ விபத்து ஏற்பட சாத்தியம் இல்லை எனவும், தீ விபத்து ஏற்பட்ட போது அச்சகத்தின் சகல மின்சார இணைப்புக்களும் பிரதான ஆளியினால் நிறுத்தப்பட்டிருந்தன எனவும் அவர்சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபையும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களமும் இது பற்றி தனக்கு அறிவித்திததாகவும் தீ விபத்தினால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தினை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# டிரோனின் ஊடகப் பேச்சாளருக்கு தொடர்ந்தும் கொலை மிரட்டல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிந்து பிரிந்து சென்றுள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வின் ஊடாகப் பேச்சாளருக்கு தொடர்ந்தும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரகாலமாக இனந்தெரியாத நபர்களினால் தனக்கு தொலைபேசியின் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக டிரோன் பெர்னாண்டோவின் ஊடாகப் பேச்சாளர் சிசில குணசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தான் காவல்துறையிடம் முறைப்பாடு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# மாடுகளுக்கு கால்வாய் நோய் வடமராட்சியிலும் பரவுகிறது

(பருத்தித்துறை)

மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுளளதாக வடமராடசி வடக்கு கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வன்னிப் பகுதியிலும் தென்மராட்சிப் பகுதியிலும் மாடுகளுக்கு வெகமாகப் பரவிவரும் கால்வாய் நோய் வடமராடசி கிழககு, பருத்தித்துறை, கரவெட்டிப்பகுதிகளில் உள்ள மாடுகளுககு தொற்றக் கூடிய அபாயம் உள்ளதால் இப் பகுதிக் கால்நடைப்பண்ணையாளர்கள் தமது கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

"மாடுகளுக்கு வாய், உதடு, கால்குளம்பு பகுதிகளில் புண்கள், அதிக உமிழ்நீர் வடிதல் ,உணவு உள்ளெடுக்க முடியாதிருத்தல், திடீரென கன்றுகள் இறப்பு என்பன ஏற்பட்டால், உடனடியாக காலநடை வைத்தியர்களுக்கு அறிவிக்குமாறு பண்ணையாளர்களுக்கு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். அத்துடன் வடமராடசிப் பகுதிக்கு மாடுகளை வேறு இடங்களிருந்து கொண்டுவருவதும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவிளம்பரம்


### திருமணசேவை

ஏரேமியான் திருமண சேவை. இ.துரைசிங்கம் உரிமையாளர், 39/2 மூத்தவிநாயகர் வீதி, நலலூர், யாழ்பபாணம்.

கிளை:-இல.11,பருத தித் துறை வீதி, நல்லூர் சிவன் கோவில பின்புறம், யாழ்ப்பாணம்.

எம்மிடம் உள நாட்டு, வெளி நாட்டு R.C,Non R.C ,இந்துக்கள் போன்ற யாவருக்கும் திருமணம் செய்துகொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இடம் "ஏரேமியான் திருமண சேவை". (C-270)


## போதைப்பொருள் எதிர்ப்புக் கருத்தரங்கு

கடந்த 25ஆம் திகதி முதல் அனுட்டிககப்பட்டு வரும் போதைப் பொருள் எதிப்பு வாரத்தை ஒட்டி, யாழ.மாவட்டத்தில் தரம் 10,11,12, 13 மாணவர்களிடையே போதைப் பொருள் எதிர்ப்புத்தொடர்பான கருத் தரஙகுகளை மதுவரித் திணைக் களம் நடாததிவருகின்றது.

இக் கருத்தரங்குகள் இன்று யாழ்.மத்திய கல்லூரி மலலாகம் மகாவத்தியாலயம் ஆகியவற்றிலும் நாளை முதலாம் திகதி சுழிபுரம விக்டோரியாக் கல்லூரி, யாழ் இந் துக்கல்லூரி ஆகியவற்றிலும் இடம்பெறவுளளன. (உ-19)

## ஓய்வுதிய முரண்பாடு நிவர்த்தி கணிப்பீட்டுத் திகதியில் மாற்றம்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் ஓய்வூதி யக கொடுப்பனவு முரண்பாட்டை நிவர்ததி செய்வதற்காக கணிப் பீட்டுத்திகதியில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி புதிய கணிப்பீட் டுத் திகதியாக 1997ஜனவரி 1ஆம் திகதி நிர்ணயிக்கப்பட் டுளளது. இதற்குமுன் இத்திகதி 1996டிசம்பர் 31என நிர்ணயிக் கப்பட்டிருந்தது.

இதற்கான பிரேரணையை இரண்டு வாரங்களிற்குள் அமைச்சரவை யில சமர்ப்பிகவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல் கள அமைச்சர் அமரசிறீ தொடாங் கொட தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவையில் பல தொழிற்சங்கங்கள் விடுத்த வேண்டுகோளிற்கிணங்க மாற் றப்பட்ட திகதிக்கேற்ப ஓய்வூ திய சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதால் ஓய்வூ தியம் பெறுபவர்களிற்கு சிறந்த பலன் கிட்டுமென அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். (உ-2)

# உடன்படிக்கைக்கு எதிரான மனுவில் பிரதிவாதிகளை மாற்ற அனுமதி

## மேன் முறையீட்டு நீதிமன்று வழங்கியது

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப்புலிகளுக் கும், இதற்கு முன்னர் ஆட்சிப் பீடத்தில இருந்த ஐக்கிய தேசி யக் கட்சி அரசாங்கத்துக்கும் இடையில் 2002ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட புரிந் துணாவு உடன்படிக்கையை இரத் துச்செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் குறிப் பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளை மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கி யுள்ளது.

ஏற்களவே தாக்கல் செய்யப் பட்டிருநத இம் மனுவில் கடந்த அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் அவரின் அமைச்சரவையும் பிரதிவாதி களாகக் குறிப்பிடப்பட்டிருந் தது.

இதேவேளை, தற்போது அர சாங்கம் மாற்றம்பெற்று ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிப்பீடம ஏறி யுள்ளமையால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட, அமைச்ச ரவையை பிரதிவாதிகளாக மாற்று வதற்கு கோரும் வகையிலான மனு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் புதிதாக தாக் கல்செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமா ரணில் விக்கிரம சிங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனும் கைச் சாத்திட்ட போர்நிறுத்தப் புரிந் துணர்வு உடன்படிக்கையை இரததுச்செய்யக் கோரி தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் யூலை மாதம் 19ஆம திகதி விசாரணைக்கு எடுத்துகொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஜே.விபியின் 'செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா, சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ன ஆகியோரின் சார்பிலும் சிஹல உறுமயக் கட்சி, சிங்கள ஜகாதிக சஙக மேய ஆகியவற்றின் சார்பிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையை இரததுச்செய்யுமாறு கோரி மனு வானவது தாக்கல் செய்யபபட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-121)



தமிழீழ மாணவர் எழுச்சி நாளன்று உரும்பிராய் பிள்ளையார் அலயத்தில் இருந்து பொன்.சிவகுமாரனின் சிலைக்கு வலி.கிழக்கு பாடசாலை மாணவர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத் துச் செல்லப்பட்ட காட்சி. படம்:எஸ்.ரி.விமலதாஸ்

## ஜனாதிபதியின் உதவி, ஒத்தாசையுடன்,

# மூவினத்தவரையும் இணைத்து இளைஞர் படையணி உருவாக்கம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்ததாக 'துர்ணசக்தி விசேட இளைஞர் படையணி' என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க தெரி வித்துள்ளார்.

இந்த அமைப்பின் ஊடாக இளைய சமுதாயத்தின் ஆற் றல்களை வலுப்படுத்தும் பல திட்டங்களை அமுல்செய்யப் போவதாக தெரிவித்த ஜனாதி பதி இளைஞர்கள் யுவதிகள் ஒன்று சேர்ந்து மக்களுக்கு ஆற்றும் சேவைகளின் அடிப் படையில் பதக்கங்கள் வழங் கப்படவுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, 15வயதுக்கும் 25வயதுக்கும் இடைப்பட்ட இளை ஞர், யுவதிகள் இளைஞர் படை யணியில் சேர்க்கப்படவுள்ள னர்.

இந்த அமைப்பில் மூவினத தையும் சோந்த இளைஞர் யுவதி கள் எதுவித பாரபட்சமின்றி சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தேசிய இளைஞர் சேவை மன் றத்தின் தலைவரும் செயலா ளர் நாயகமுமான நீல் பண் டார தெரிவித்துள்ளார். (உ-60,10)





பருத்துத்துறை கற்கோவளம் புனித நகர் முன்பள்ளித் திறப்புவிழா நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட கிராம சேவை அலு வலர். எஸ்.சிவசண்முகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் என்.சகாயநாதனால் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ரீ.சத் தியசீலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: பரு-நிருபர்

# கடலாடல்

மணற்கும்பிகளுக்குப்
பின்னே தெரியும் பெருங்கடல்
காற்று
போன தடவை
இரண்டு கும்பிகளை ஆக்கியிருந்தது
அதற்கு முன்
மூன்று கும்பிகள் இருந்தன.
கூடவே மணற்பீடமும்
படிகளும் இருந்தன.
பின் பீடங்களை அழித்து
மணற் சிம்மாசனஞ் செய்து
பின் அதையும் சிதறடித்தது காற்று!
காற்று!
அதன் போக்கில்
மணலுருவங்களில் திளைத்தது.
பின்னே
பின்னதைக்கும் அலைகளுடன்
பெருங்கடலாடல்!
கடற்தீர்த்தம்!


கரையில்
அலைகளில்
கடலின் அணைப்பில்
சிறு நண்டின் கவின் உலகம்!
பௌர்ணமி நிலவில்
பொந்துறையும் சிறுநண்டுகள்
மணற்பீட மேறிக் குதூகலித்தன.
கடலாடிக் களித்தன!
''விழிகள் மலர்களல்ல
கொடிய! கொடிய!"
''கண்கள் கயல்களல்ல
கூற்றம்! கூற்றம்!"

அலையாட
சிறு நண்டாட
கடலாடு காதையுடன்
வந்த கானல் வரிகள்!
நெஞ்சைத் தைத்ததும்
பெருங்கற்காலம் நொடியிற் பறந்தது!
பின் தத்துவ இடையீடு:
உணரக் கூடிய தெல்லாம்
நிரந்தரமானதல்ல
எனினும் கடலின் அணைப்பில்
உயிர்த்திருந்தது உலகம்!

அலைவுறும் மனத்தை
ஆற்றிடும் அலைகள்
அலைகளில் ஆடிடும்
சிறுநண்டின் உலகில்
நரியின் இடையீடு;
தக்கன வாழ்ந்தன
தவறிய கதைகள்
செவி வழிக் கதைகளாயின!
ஆட்புல எல்லைக்கப்பாலும்
வளைந்து போம் ஆழி!
தாங்கும் கடலின் அணைப்பில்
கவினுற
உலகு இருந்தது!
பின் வந்தது மனித இடையீடு;
பெருங்கடலாடல் ஓய்ந்து,
உயிர்ப்புடன் இருந்த கடல்
குற்றுயிராயக் கிடைக்கிறது!-----

-அஸ்வகோஷ்


உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் -05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

2010ஆம் ஆண்டளவில் 80 சதவீதமான மக்கள் கடற்கரையில் இருந்து 100 கிலோமீற்றர்கள் தூரத்துக்கு உள்ளாகவே குடியிருப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:10 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

**பின்வரும் விடயத்தை வாசித்து அதன்கீழ் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

*மஞ்சள் வானம் செக்கச் சிவப்பாக மாறும் போது அதிற் காணும் அழகுதான் என்ன, ஓடுகின்ற முகில்கள் எத்தனை? அசைவற்று நிற்கும் மேகங்கள் எத்தனை? விண்மிசை வெண்ணிறமாக விளங்கிய ஆதவன் அடிவானை அணுக. அணுக வானவீதியைக் கடந்து வருத்தம் நீங்க முற்படுபவன் போல செந்நிறமாக மாறுகின்றான்.*

**(01)** (i) அழகு என்பதன் ஒத்த கருத்துள்ள சொல் தருக.(.........................)
(ii) ஓடுகின்ற என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல் தருக.(.........................)
(iii) அஃறிணைச் சொல் ஒன்று தருக (.........................)
(iv) பன்மைச் சொல் ஒன்று தருக. (.........................)
(v) ஓடுகின்ற என்பது எவ்வகை எச்சம் (.........................)
(vi) அணுக அணுக என்பது எவ்வகைத் தொடர். (.........................)
(vii) ஆதவனை எப்படி வர்ணித்துள்ளார் (.........................)
(viii) மஞ்சள் வானம் எப்படி மாறுகின்றது. (.........................)
(ix) செந்நிறம் என்பதைப் பிரித்தால் (.........................)
(xi) சூரியனின் எக்காட்சி விபரிக்கப்படுகின்றது (.........................)

**(02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக மாற்றி எழுதுக.**
(i) நீர்/மிருகங்கள்/இன்றி/அலைந்தன/காட்டில் ............................
(ii) நறுமணம்/மலர்கள்/வீசியது/காலையில் ............................

**(03) இத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக**
(i) அல்லும் பகலும் (.............) (ii) ஓடும் புளியம் பழமும் போல (...........)

**(04) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தருக.**
(i) பெட்டி (..........................) (ii) அறை (...................)
(iii) முயல் (..................) (iv) வைத்தியர் (......................) (v) நிறம்(....................)

**(05) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தருக.**
(i) School (.............................) (ii) Pen (...........................)
(iii) Book (...........................) (iv) Chair(...........................) (v) Teacher (..........................)

**(06) சரியான விடையின் கீழ் கோடிடுக.**
(i) மாலை நேரத்தில் சுருங்கும் மலர்களுள் ஒன்று.
1.அல்லி 2.முல்லை 3.செவ்வரத்தை 4.மல்லிகை
(ii) இரவு நேரத்தில் கண்பார்வை கூடிய பறவை
1.ஆந்தை 2.காகம் 3. மயில் 4.பருந்து
(iii) உணவு வகைளை உண்பதற்கு முன் ஆக வேண்டியது
1. உணவில் சிறு பகுதியை எறிதல் 2. கைகளை நன்றாகக் கழுவுதல்
3. எவ்வகை உணவு எனப் பார்த்தல் 4. உணவை மணந்து பார்த்தல்
(iv) ஒழுங்கிற்கும் ஒற்றுமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டு
1.எறும்பு 2.சிங்கம் 3. நாய் 4.குயில்
(v) மயிலின் முட்டையின் நிறம்
1.கபிலம் 2.வெள்ளை 3. சிகப்பு 4.ஊதா
(vi)  அருகே காணப்படும் உபகரணத்தின் பெயர்
1.வாள் 2.கத்தி 3. சுத்தியல் 4.உளி
(vii) விற்றமின் C குறைபாட்டால் ஏற்படும் நோய்
1. நீரிழிவு 2. கண்டமாலை 3. முரசுகரைதல் 4. யானைக்கால்
(viii) வாகனங்களின் பின்பக்க இலக்கத் தகட்டிற்கு பூசப்படும் நிறம்
1. மஞ்சள் 2. சிவப்பு 3. கறுப்பு 4. வெள்ளை
(ix) இலங்கை மின்சார சபையைக் குறிக்கும் ஆங்கிலக் குறியீடு
1.E.B 2.C.E.B 3. S.E.B 4.L.E.B
(x) குறைந்த மழை பெறும் மாவட்டம்
1. யாழ்ப்பாணம் 2. கண்டி 3. மன்னார் 4. கற்றன்

**(07) கீழ் காணப்படும் தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**


(i) (ii) (iii) (iv) (v)



(...............) (...............) (...............) (...............) (...............)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கற்றாளை | குப்பைமேனி | தென்னை | துளசி | வாழை | கள்ளி | முள்ளி |

**(08)** கீழே காணப்படும் மின்குமிழ் ஒளிராமைக்குரிய காரணம் எதுவாக இருக்கலாம்




1. தவறாக இணைக்கப்பட்டுள்ளது
2. மின்குமிழ் சக்தி இழந்துவிட்டது
3. மின்கலத்தின் எண்ணிக்கை போதாமை

**(09)** பின்வரும் உபகரணங்களைப் பாவிப்பவர்களின் பெயரை எழுதுக
(i) கத்தரிக்கோல் ................ (ii) கலப்பை ..............
(iii) சாந்தகப்பை ................. (iv) வெண்கட்டி............. (v) அளவுநாடா.............

**(10)** பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க
(i) அரசன் எனப்படுபவன்
1. வியாபாரம் செய்பவன் 2. ஆட்சி புரிபவன்
3. போர் புரிபவன் 3. முதலாளியாக இருப்பவன்
(ii) இலங்கையின் அமைப்பு
1. தேங்காய் வடிவம் 2. பானை வடிவம்
3. மாங்காய் வடிவம் 4. உருண்டைவடிவம்
(iii) மின்சாரம் ஏற்றபட்ட வயரின் நுணியில்· பிளாஸ்திக் பொருளைப் பிடித்தால்
1. மின்தாக்கும் 2. பிளாஸ்டிக் எரியும்
3. கைகளில் மின்தாக்கும் 4. எதுவும் நிகழமாட்டாது
(iv) ஏப்பிரல் மாதத்தில் மலரும் பூ வகைகளில் ஒன்று
1. செவ்வரத்தை 2. தாமரை 3. முள்முருங்கை 4. கறிமுருங்கை
(v) மிகவும் சிறிய பழமுடைய பெரிய மரம்
1. மிளகாய் 2. பனை 3. ஆல் 4. மா


**(11) தரப்பட்ட உருவின் பெயர் தருக.**

(i) (ii) (iii) (iv)



(...............) (...............) (...............) (...............)

**(12) கீழே தரப்பட்டுள்ள அடங்கல் வரிப்படத்தை கருத்தில் கொண்டு தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**





(i) வடை மட்டும் உண்பவர்கள் எண்ணிக்கை? (...........................)
(ii) தோசையும் அப்பமும் உண்பவர்கள் எண்ணிக்கை? (......................)
(iii) ஒருவருக்கு 2 தோசை வீதம் தேவைப்படும் தோசைகளின் எண்ணிக்கை? (...........................)
(iv) மூன்று உணவும் உண்பவர்கள் எத்தனை பேர்? (...........................)
(v) வடையும் தோசையும் உண்பவர்கள் எத்தனை பேர்? (...........................)
(vi) தேவைப்படும் வடைகள் எத்தனை? (...........................)
(vii) ஒரு வடை நான்கு ரூபா வீதம் வாங்கத் தேவைப்படும் பணம் எவ்வளவு? (.......)
(viii) இம்மூவகை உணவுகளையும் உண்பவர்கள் எத்தனை பேர்? (......................)

**(13) ஆரம்பப் பாடசாலை ஒன்றில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.**


| தரம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| ஆண் | 10 | 20 | 25 | 15 | 25 |
| பெண் | 15 | 25 | 10 | 15 | 10 |

(i) இப்பாடசாலையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை என்ன ? (.................)
(ii) கூடிய எண்ணிக்கை உடையவர்கள் ஆண்களா? பெண்களா? (..................)
(iii) ஆண்கள் பெண்கள் எண்ணிக்கை சமமாகவுள்ள தரம் எது? (..................)
(iv) மாணவர்களின் மொத்த எண்ணிக்கை சமமாக உள்ள இரண்டு தரங்களும் எவை? (..................)
(v) இப்பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் எண்ணிக்கை வகுப்பில் உள்ள மாணவர் தொகையின் 4/5 பங்கு ஆகும். சித்தி பெற்ற மாணவர் எண்ணிக்கை என்ன? (..................)

**(14) அட்டவணையைப் பயன்படுத்தி ஐந்து தரங்களிலும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் காட்டும் நிரல் வரைபை இதன் கீழ்த் தரப்பட்டுள்ள வரைபில் உரிய நிரலில் நிழற்படுத்துவதன் மூலம் காட்டுக.**





**(15)**




அருகே தரப்பட்டுள்ள உரு சார்பாக பின்வருவனவற்றைத் தருக
(i) பெயர் : (...............) (ii) முகம: (...............)
(iii) உச்சி: (...............) (iv) விளிம்பு:(...............)

**(16)**




அருகே தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவைக் காண்.க (...............)

**(17)**



அருகே உள்ள உருவில் அவதானிக்கக் கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை எத்தனை? (...............)

**(18)** கண்ணன் பி.ப. 2.30 இற்கு தனது உறவினர் வீட்டில் இருந்து புறப்பட்டு பி.ப. 6.30 போல் வீட்டிற்கு வந்தால் அவன் பிரயாணம் செய்த நேரம் எவ்வளவு? (...............)

**(19)** நாள் ஒன்றுக்கு ஒன்று ரூபா 10 படி 500 முட்டை விற்கும் வியாபாரி 5 நாட்களில் நடைபெற்ற விற்பனையில் எவ்வளவு ரூபாவை காசாகப் பெறுவான்? (...............)

**(20)** ஒரு சேட்டின் விலை 200 ரூபாவாகும், ஒரு டசினுக்கு இரண்டு குறைவாக விற்பனை செய்யும் வியாபாரிக்குக் கிடைக்கும் பணம் எவ்வளவு? (...............)

**(21)** எனது தம்பி ஓர் கடையில் ரூபா 100 பணத்தைக் கொடுத்து பொருட்களை வாங்கிய பின் வியாபாரி மிகுதிப் பணமாக 20 ரூபா தாள் ஒன்றும் 5 ரூபா குற்றி இரண்டும் கொடுத்தார். அவன் வாங்கிய பொருளின் பெறுமதி யாது? (..............)

**(22)** 'வீதியால் வந்து கொண்டிருந்தபோது மோட்டார் வண்டியில் அகப்பட்ட நாயக் குட்டி கத்திய வண்ணம் இருந்தது. அதை இரக்கத்துடன் தூக்கிய நான்' **என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.**

i) ..................................................................................
ii) ..................................................................................
iii)..................................................................................
iv)..................................................................................
v) ..................................................................................
vi) ..................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ்மீர் மக்களின் விருப்புக்கமையவே தீர்வு காணப்படவேண்டும் என்கிறது பாக். தரப்பு

இந்திய -பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்களிடையே நேற்று முன்தினம் டில்லியில் முடிவடைந்த முக்கிய பேச்சுக்கள் திருப்திகரமாக இருந்தன என்று இரு நாடுகளும் திருப்தி தெரிவித்துள்ளன.

பல்வேறு நம்பிக்கை மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இந்தப் பேச்சுக்கள் இருந்தன வென்று வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் கூறியிருக்கிறார்.

இரு நாடுகளின் தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது ,புதுடில்லி-இஸ்லாமாபாத் போக்குவரத்தைத் தொடங்குவது பற்றியும் அப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.



இந்தப் பெண்கள் தாங்கள் எழுதிய தேர்வு முடிவுகளைப் பார்க்கவில்லை. காக்கி பணி உடை அணிந்துள்ள இவர்கள் கர்நாடகப் போக்குவரத்துப் பேருந்துத்துறை நடத்துநர்கள். தங்களுக்கு இன்றைக்கு எந்த இடத்தில் பணி அளிக்கப்பட்டுள்ளது என்பதை பார்க்கின்றனர்.

இந்தியா -பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்தில் 6 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளிடையே அமைதி, பாதுகாப்பு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்தியச் செய்தி தொடர்பாளர் இரு தரப்பிலும் சில திட்டங்களும் யோசனைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தார்.

அணுவாயுதப் பேச்சுக்களால் எடுக்கப்பட்ட முடிவுகள் தகவல் தொடர்பு ,மேம்பாடு ,மனிதாபிமான பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் பேசுகையில் இரு நாடுகளின் தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் அறிவிப்பு விரைவில் வெயியாகும் என்றார்.

ஸ்ரீநகர் உசப்பராவாப் பேருந்து போக்குவரத்தைத் தொடங்குவது, கராச்சியில் இந்தியத் தூதரகத்தையும் மும்பையில் பாகிஸ்தான் தூதரகத்தையும் மீண்டும் திறப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காஸ்மீர் பிரச்சினைக்கு அம் மாநில மக்களின் விருப்பத்தையும் கருத்தில் கொண்டு தீர்வு காண வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (து)




## அர்ச்சகரைத்தாக்கிவிட்டு கர்ப்பக் கிரகத்தைக் கட்டிப்பிடித்தவர் கைது

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் கருவறையில் நுழைந்து மூலவர் லிங்கத்தைக் கட்டிப்பிடித்து அர்ச்சகரைத் தாக்கிய இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு கோயிலில் பக்தர்கள் வழிபட்டுக் கொண்டிருந்தனர் .அப்போது திடீரென ஒரு இளைஞர் கருவறைக்குள் நுழைந்தார்:

அதைத் தடுக்கமுயன்ற அர்ச்சகரைத்தாக்கிப் பூநூலை அறுத்துவிட்டார். பின்னர் மூலவர் லிங்கத்தைக் கட்டிப்பிடித்தார். கோயில் காவலர் அவரை வெளியேற்ற முயன்றார் .காவலரை அந்த இளைஞர் தாக்கினார். பக்தர்கள் இளைஞரை மடக்கிப் பிடித்தனர். (து)

## நடிகர் விஜயகாந்த்–பா.ம.க. மோதல் முடிவுக்கு வந்தது

திரைப்பட சம்மேளனம் உட்பட பல்வேறு அமைப்புகளின் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று நடிகர் விஜயகாந்துடனான மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது பா.ம.க .

உணர்வு பூர்வமான இப் பிரச்சினையில் விஜகாந் மன்றத்தினருக்கு எதிரான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று கட்சியினருக்கு பா.ம.க. தலைவர் ஜி.கே மணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் நடிகர் விஜயகாந் வேண்டுமென்றோ அல்லது விபரம் புரியாமலோ தெரிவித்த கருத்துக்கள் ப.மா.க. தொண்டர்களைக் கொந்தளிகக வைத்திருக்கிறது. இதன் எதிரொலியாக ஆங்காங்கே சில சம்பவங்களும் அதைத் தொடர்ந்து பதிலுக்குப் பதில் சில நிகழ்வுகளும் நடந்திருக்கின்றன.

மக்கள் பிரச்சினைக்காக போராடுவோம். நாம் சந்திக்க வேண்டிய அரசியல் பிரச்சினைகள் ,சாதிக்கவேண்டியவை ஏராளம் இருக்கின்றன. மதுக்கடைகளுக்கு எதிர்ப்பு ,ஏழைஎளிய மாணவர்களின் வாழ்வுக்கு எதிரான கல்விக் கட்டணக் கொள்கையை எதிர்த்தல் ,விவசாயிகளின் நலனைக் காத்தல் ,எல்லோருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற மக்களின் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து போராட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

எனவே உணர்வுகளைத் தூண்டும் இதுபோன்ற பிரச்சினைகளில் கனவத்தைச் செலுத்தாது மக்களின் பிரச்சினைகளுக்காகப் போராட நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

ஆகவே உழைக்கும் பாட்டாளி மக்களான திரைப்பட சம்மேளனம் ,திரைப்படத் தாயரிப்பாளர்கள் சங்கம் ,விநியோகஸ்தர்கள் ஆகியோரது வேண்டுகோளை ஏற்று இந்தப் பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளிவைத்து விடுங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

### தாமதமாகும்சொத்துச் சேர்ப்பு வழக்கு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துச் சேர்ப்பு வழக்கு இன்னமும் கர்நாடக மாநிலத்தில் தொடங்கப்படாதது குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி கவலை தெரிவித்துள்ளார். (து)

### தமிழ் நாட்டில் மீண்டும் லாட்டரிச் சீட்டா?

தமிழ் நாட்டில் லாட்டரிச் சீட்டுக்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டால் அதை எதிர்த்து பா.ம.க தீவிர போராட்டத்தில் ஈடுபடுமென அக்கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

வேலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், லாட்டரி ஒழிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மாற்று வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றார்.

ஆனால் லாட்டரி விற்பனையை மீண்டும் அதிகரிக்கக் கோரி சென்னையில் மாநாடு நடத்தப்படுவதில் ஏதோ சதி இருப்பதாக அவர் கூறினார்.கிராமப்புற மதுக்கடைகளை மூடக் கோரியும் பா.ம.க போராட்டம் நடத்து மென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா தான் பொறுப்பேற்க வேண்டுமே தவிர அமைச்சர்களைப் பலிக்கடா ஆக்குவது சரியல்ல என்றும் ராமதாஸ் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலுள்ள 10 நிலைப் பல்கலைக்கழகங்களை மாநில அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று அவர் விலயுறுத்தினார்.(து)

## இந்தியச் செய்திகள்

## இந்தியா- பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் புதுடில்லியில் சந்தித்தனர்

(டில்லி)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டு வெளியுறவுச் செயலர்கள் 6 ஆண்டுகளின் பின்னர் நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடிப்பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹசானுக்கும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் றியாத்சேகருக்கும் இடையில் நடைபெற்ற இப் பேச்சு வார்த்தையில் இருநாடுகளுக்கும் இடையில் நல்லுறவைப் பேணக்கூடியதும் ,நம்பிக்கையூட்டக் கூடியதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,அமைதி மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்கள் பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

மேலும், அணுவாயுதம் பற்றிய பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகள், தகவல் தொடர்பு, மேம்பாடு, மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றியும் அப்போது ஆராயப்பட்டது.

கராச்சியில் இந்தியத்தூதரகத்தையும் மும்பையில் பாகிஸ்தான் தூதரகத்தையும் மீண்டும் திறப்பது குறித்து விரிவாக இவர்கள் ஆராய்ந்தனர்.

(உ-61,10)



காவிரி உற்பத்தியாகும் குடகு பகுதியில் கடந்த சில வாரங்களாக பெய்த பருவமழையை அடுத்து அப்பகுதிகளில் நெல் [illegible]

## வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணியில் அஞ்சல் ஊழியர்கள்

(பெங்களூர் )

வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணியில் மாநில அரசு ஊழியர்களுக்குப் பதிலாக அஞ்சல் துறை ஊழியர்களைப் பயன்படுத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதே போல தேர்தலுக்கு முன்பாக சர்ச்சைக்குரிய விளம்பரங்களை வெளியிடுவதற்குத் தடை விதிக்கும் வகையில் சட்டம் கொண்டு வருமாறு மத்திய அரசைத் தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலின் போது தமிழ் நாட்டில் வாக்காளர் பட்டியலிலிருந்து பல்லாயிரக் கணக்கானோரின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் கூறப்பட்டது.

இந் நிலையில் அடுத்த வருடம் ஏலவரியைக் கணக்கிடும் நாளாகக் கொண்டு அகில இந்திய அளவில் வாக்காளர் பட்டியலைத் திருத்தத் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே பெங்களூரில் தேர்தல் சீர்திருத்தம் குறித்த கருத்தரங்கில் நிறைவுரையாற்றிய தலைமைத் தேர்தல் ஆணையகம் கிருஷ்ண மூர்த்தி தேர்தலையொட்டி ஆளும் கட்சிகள் வெளியிடும் சர்ச்சைக்குரிய விளம்பரங்களைத் தடை செய்ய மத்திய அரசைக் கோரியிருப்பதாகத் தெரிவித்தார்.

இதேபோல 5ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பதற்கான வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை விதிக்கச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று மத்திய அரசிடம் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இனிமேல் வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்க வேண்டும்மென்றால் சம்பந்தப்பட்ட வாக்காளருக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தவிட்டிருப்பதாக கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றைவை பிற - குறள்

வலம்புரி

## மாணவர்களின் இடைவிலக்லை தடுக்க முன்வாருங்கள்

யுத்த சூழ்நிலையால் யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வியில் ஏற்பட்ட தாக்கம் இப்போது வெளிப்படத் தொடங்கியுள்ளது. கல்விப் பெறுபேறுகளில் வீழ்ச்சி, மாணவர்களின் நடத்தையில் மாற்றம்-கலாசாரப் பிறழ்வு என்பன அவற்றில் சிலவாகும்.

ஒரு காலத்தில் கல்வித் தரத்தில் முன்னணி வகித்த யாழ்ப்பாணம் இப்போது கல்வித் தரத்தில் கீழ்நோக்கிச் செல்லும் பரிதாபத்திற்குட்பட்டுள்ளது.

இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள வெளிநாட்டு நாகரிக நுழைவு, தொலைக்காட்சிக கலாசாரம் என்பன முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இவை உயர் வருமானம்உடைய குடும்பங்கள் முதல் நடுத்தர வருமானத்தை உடைய குடும்பங்கள் வரை காணப்படுகின்ற பிரச்சினைகள் ஆகும்.

ஆனால், கீழ்மட்ட வருமானத்தையுடைய குடும்பங்களில் உள்ள மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் வேறுபட்டவை. இக் குடும்பங்களில் உள்ள வறுமை, அறியாமை காரணமாக மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திவிட்டு வேலையை நாடிச்செல்கின்றனர். படிக்க வேண்டிய சிறுவர்கள் வீட்டின் வறுமைச் சுமையைப் போக்குவதற்காக ஏழாம், எட்டாம் தரங்களுடன் படிப்பை நிறுத்திவிட்டு வாகனம் திருத்தும் இடங்களிலும், கடைகளிலும், கடற்தொழில் மற்றும் விவசாயத் தொழிலிலும் ஈடுபடுகின்றனர்.

சிறுவர் உரிமை, கட்டாயக் கல்வியென்றெல்லாம் பிரசாரம் நடைபெறுகின்ற போதிலும், யாழ்ப்பாணத்து நடைமுறையில் அந்தப் பிரசாரங்கள் எதுவுமே எடுபடவில்லைப் போல் தெரிகின்றது.

ஏழை மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக இடம் பெயர்ந்த முகாம்கள், நலனோம்பு நிலையங்கள், குடியேற்றத்திட்டங்கள் மற்றும் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு வேலைக்குச் செல்கின்றனர். இதில் வேதனை என்னவெனில் இடைவிலகிய மாணவர்கள் பலருக்கு எழுத, வாசிக்கத் தெரியாமல் இருப்பதாகும்.

விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பமென உலகம் முன்னேறிக் கொண்டுவரும் இந்த நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாசிக்க, எழுதத் தெரியாமல் மாணவர்கள் கல்வியைக் கைவிட்டு, வீட்டு வறுமையொழிப்புக்காகத் தமது பிஞ்சு உடம்பை வருத்திக் கொள்கின்றனர்.

உயர், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்விக்காகப் பெருமளவு பணத்தைச் செலவிட்டு அதில் தமது முழுமையான திறனைக் காட்ட முடியாத நிலைமை ஒருபுறமும், கற்கும் ஆற்றல் இருந்தும் ஒருநேர உணவுக்கு வழியின்றி கல்வியை உதறிவிட்டு வீட்டுச் சீவியத்திற்காக உழைக்கச் செல்லும் மாணவர்கள் இன்னொரு புறமுமாக இருவடிவத் தோற்றங்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன.

இருவடிவத் தோற்றத்தைக் கண்டும் பாராமுகமாக இருப்பதன் விளைவை யாழ்ப்பாண சமூகம் மிகவிரைவில் அனுபவிக்கவே போகின்றது. பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டியமாணவர்களின் இடைவிலகல் வறுமைப்பட்ட குடும்பங்களில் தாராளமாக நடைபெறுகின்ற அதேவேளை, சிறிய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களே இவ்வாறு இடைவிலகுகின்றார்கள் என்ற தகவலும் இங்கு நோக்குதற்குரியது.

சிறிய பாடசாலைகளில் கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களங்கள் கொண்டுள்ள அக்கறையீனம் என்பவை காரணமாகவும் இடைவிலகல் நடைபெறுகின்றதென்ற உண்மையும் உணரப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்க அனைவரும் முன்வந்து இடைவிலகும் மாணவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு கல்வி கிடைக்க வழி செய்ய வேண்டும்.

# படையினர் - புலிகள் இடையிலான சந்திப்புக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் வலுப்படுத்தும்

## க.கா. குழு பிரதித் தலைவர் வலியுறுத்து

(வவுனியா)

கருணாவுக்கு இராணுவத்தினர் உதவி வருவதாக குற்றஞ்சாட்டி அவர்களுடனான சந்திப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் இரத்துச் செய்தமை குறித்து நாம் மிகுந்த வருத்தமடைகின்றோம்.

ஏனெனில் இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளும் சந்தித்துப் பேசுவது போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு மிகவும் தேவையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

இவ்வாறு [illegible] இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் [illegible].

பிபிசி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றி தெரிவிக்கையில்,

கருணாவுக்கு இராணுவத்தினர் உதவியதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றபோதும் அதனை எம்மால் உறுதிப்படுத்த [illegible].

தமிழீழ [illegible] தமது குற்றச்சாட்டுக்கான ஆதாரம் [illegible].

இதேவேளை, [illegible] அமைச்சர் ஒருவர் தனக்கும் கருணாவுக்கும் தொடர்பு [illegible] இருப்பதாக பகிரங்கமாக கூறியிருக்கின்றார் என்றும் இது குறித்து கண்காணிப்புக்குழு கவனம் செலுத்த வில்லையென்றும் எம்மீது வீணாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. அத்துடன் இவ்விடயம் குறித்து ஊடகங்கள் எம்மிடம் சில கேள்விகளையும் கேட்டுவருகின்றன.

உண்மையிலேயே இந்தக் கேள்விகளை அரசிடம் தான் கேட்க வேண்டும் அரசின் மீதுதான் இந்தக் குற்றச் சாட்டைச் சுமத்த வேண்டும் எனவே இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கவேண்டிய தேவை எமக்கு இல்லை என்பதை மீண்டும் கூறி வைக்க விரும்புகின்றேன்.

இது ஒரு புறமிருக்க கருணாவின் விவகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தால் தான் தாம் அரசுடனான சமாதானப் பேச்சுக்களில் பங்களிப்போம் என விடுதலைப்புலிகள் அடம்பிடித்து வருகின்றார்கள். இது அரசுக்கும் பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்தப் பிரச்சினை உள்வீட்டுப் பிரச்சினை. இதனை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். அரசோ அல்லது நாங்களோ இந்த விடயத்தில் தலையிடுவது அவர்களுக்கு தான் சில சிக்கல்களை உருவாக்கும்.

எனவே கருணாவிடயத்தில் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள கடுமையான போக்கை கைவிட வேண்டும்.

மீண்டும் இராணுவத்தினருடன் நல்லுறவைப் பேணி யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடந்து கொள்ளவேண்டும்.

இதே சமயம், தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் இராணுவத்தினரிடமும் நாம் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணிக் கொள்வதற்கு முடிவு செய்துள்ளோம்.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு இரு தரப்பினரையும் தொடர்ந்து வலியுறுத்துவோம் என்றார்.

(உ-62,10)

# ரவியைக் கைது செய்யக் கோரி கூ.மொ.வி. ஊழியர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் வர்த்தக அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவிகருணாநாயக்காவை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த வேண்டும் எனக் கோரி கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன ஊழியர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ரவிகருணாநாயக்கா கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் சொத்துக்களை தமது நண்பர்களுக்கு உரிமையாக்கியுள்ளதாகவும் இதனால் ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பீடுகள் குறித்து இன்னமும் மதிப்பீடு செய்யப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, கடந்த 23ஆம் திகதி நிதி மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் குழு ஒன்று ரவிகருணாநாயக்காவை கைது செய்ய முயற்சித்தபோது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புக் காட்டியிருந்தமையினால் பொலிஸாரின் கைது செய்யும் முயற்சி தோல்வியடைந்தமை தெரிந்ததே.

(உ-60,10)

## சர்ச்சைக்கு வழி கோலும் "சிற்றி ஒவ் றிங்கோ"

(கொழும்பு)

கேள்விப்பத்திர நடைமுறையினைக் கோராது "சிற்றி ஒவ் றிங்கோ" என்ற கப்பல் சேவையில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் முதல் வடக்கில் இருந்து படையினரை தென் பகுதிக்கு கடல் வழியாக ஏற்றி இறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இந்தக் கப்பல், யுத்தம் நடைபெற்ற காலத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் நோயாளர்களை வடக்கில் இருந்து திருகோணமலைக்கு ஏற்றி இறக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் "சிற்றி ஒவ் றிங்கோ" என்ற இந்தக் கப்பல் கேள்விப்பத்திர நடை முறையினைக் கோராது சேவையில் ஈடுபட்டுவருகின்றமை குறித்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜூலை மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது கேள்வி எழுப்பவுள்ளதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-10)

## இலங்கையின் பசளைத் தேவையை ஈரான் நிறைவேற்ற இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் பசளைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஈரான் முன்வந்துள்ளது.

இலங்கை விவசாயிகளின் பசளைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வருடந்தோறும் தேவையான அளவு உரத்தை விநியோகிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்காக ஈரானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் மொஹமட் அமீன்சா அண்மையில் கொழும்பு வந்த போதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஈரான் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்த போது மனிதாபிமான உதவிகளை இலங்கை செய்திருந்தாகவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த உதவியை தாம் ஒரு போதும் மறக்கவில்லையென்றும் ஈரான்-இலங்கையின் இராஜதந்திர உறவுகள் தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.( உ-60,10)

## வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திற்கு வாய்ப்பு

(கொழும்பு)

திண்மக் கழிவுமுகாமைத்துவம் தொடர்பான திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தும் பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுப் பயண வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபை முடிவு செய்துள்ளது.

முதல்கட்டமாக எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை கண் காணிப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

(உ-60,10)

## பௌத்த பீடங்களுடன் ஒத்துழைக்க கத்தோலிக்க திருச்சபை திடசங்கற்பம்

(கண்டி)

இலங்கைவாழ் அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி ஒன்றிணைந்துவாழ அறப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், மத்திய மாகாணக் கத்தோலிக்கத் திருச்சபை தனது பூரண ஒத்துழைப்பை பௌத்த பீடங்களிற்கு வழங்குமென கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு விஜானி பெனான்டோ தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய மல்வத்தவின் புதிய பீடாதிபதி திப்புட்டுலாவ சித்தார்த்த சுமங்கலதேரரை நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாற்றிய போதே ஆயர் இவ்வாறு கூறினார்.

அரசியல், பண்பாடு, மனிதத்துவம், கலாசாரம் ஆகிய துறைகளில் பின்னடைவை எதிர் நோக்கியுள்ள இலங்கையை உன்னத நாடாகக் கட்டியெழுப்ப சகலரினதும் ஒத்துழைப்பு அவசியம் என தேரர் வலியுறுத்தினார்.

நாட்டின் சுபீட்சத்திற்கும் சமாதான சுகவாழ்விற்கும் அனைவரும் பேதங்களை மறந்து செயற்படவேண்டுமென மல்வத்த பீடாதிபதி திப்புட்டுலாவ சித்தார்த்த சுமங்கல தேரர் ஆயரிடம் கூறியுள்ளார்.

(உ)


## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆபாசப் புத்தகங்கள், பத்திரிகைகள் இருந்தால் அக்னி தேவனுக்கு இரையாக்குங்கள். வீட்டில் ஆன்மீகப் புத்தகங்களையும் தேசபக்த வீரர்களின் வரலாற்றுப் புத்தகங்களையும் வாங்கிப்படிக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளாந்தெரு மாவடிஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் ஒன்பதாம் நாளான நேற்று வைரவப் பெருமான் வீதியுலா வரும் காட்சி.

## கருணா அணியைச்..

சிக் கூடி, களுதாவளை, கல்லாறு ஆகிய பகுதிகளில் மற்றொரு குழுவாகவும் இயங்கிவந்த கருணா குழுவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கிகள், எறிகுண்டுகள், தொலைத்தொடர்புக் கருவிகள், கையடக்கத் தொலைபேசிகள் என்பன விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 7 பேரும் கருணாவின் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படையினருக்கும் பொலிஸாருக்கும் பிடிகொடாமல் இரகசியமாக இவர்கள் செயற்பட்டு வந்தமை விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் இடம் பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டுவரும் கருணா குழுவினரே காரணமென ஏற்கனவே குற்றம் சாட்டியுள்ள விடுதலைப் புலிகள் கருணா விவகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வரை இராணுவத்தினருடனான மாதாந்த சந்திப்பை இடை நிறுத்தியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-த)

## எரிக்சோல்...

என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜனாதிபதி சந்ரிகா குமாரதுங்காவை எரிக்சோல் ஹெய்ம் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடுவாரென எதிர்பார்க்கபட்டபோதிலும் அச் சந்திப்பு இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-,121)

## மூன்று ....

பட்டுள்ளன.

மடுத் தேவாலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவர வேண்டுமென்றும், வாகனங்களுக்கான ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் விபரங்களும் அவற்றில் பயணம் செய்யும் பக்தர்களின் எண்ணிக்கையும் மடுச் சந்தியில் வைத்துப் பொலிஸாரினால் வழங்கப்படும் படிவங்களில் நிரப்ப வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-121)

## எம்.பிக்கள்....

சார்பின்றி நடந்து கொள்ள வேண்டும். ஆட்சியாளர்கள் தவறு செய்தால் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும்.

ஆட்சியாளர்கள் மக்களுக்கு நன்மைதரும் செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும்.

இதேவேளை எம்மை நாடிவருகின்ற பல்வேறு கட்சியனரும் வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டிருக்பார்கள், அவர்களுக்கு எல்லாம் பக்கசார்பாக அறிவுரை கூறினால் விகாரைகளும் அரசியல் மயமாகி விடும் எனவே பாராளுமன்றத்தைத் அமைச்சர்களும் மதிக்க வேண்டும். அங்கு நல்லொழுக்கத்தைப் பேண வேண்டும்.

எம்.பிக்கள் அமைச்சர்களின் கீழ்த்தரமான செயற்பாடுகளால் சில காலமாகப் பாராளுமன்றம் தேநீர்க் கடைபோல காட்சி கொடுத்து வருகின்றது.இந்தக் காட்சியைத் தொலைக் காட்சியூடாக மக்களும் பார்க்கின்றார்கள் என்பதை இவர்கள் மறந்து விடக்கூடாது என்றார். (உ-10)

## பண்டாரவன்னியன்..

மனித அறிவிற்கும் தமிழ் பண்பிற்கும் மாறாக செய்யப்படும் ஒவ்வொரு செயல்களும் சமூக விரோதமாகும்.

குழுக்களாக திரிந்து சண்டையிடுவது, போதை பொருள் பாவனை - பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்வது, பாலியல் பலாத்காரம் விபச்சாரம் - தீய நாட்டங்களில் ஈடுபடுபவர்கள் குறிப்பிட்ட வயதுக்குட்பட்டோர் மது அருந்துதல் புகைத்தல் - வீதிகளில் நின்று மக்களுக்கு இடையூறு விளைவித்தல் - களவு, கொள்ளை, பொருள் பறித்தல் போன்றவற்றில் ஈடுபடுவோர் ஆகியோர் சமூக விரோதிகளாக கருதப்படுவர்.

எனவே தேசத்தின் விடுதலைக்காக சமூக விரோதிகளை அழிக்க நாம் ஒரு போதும் தயங்கமாட்டோம் தேசத்தின் துரோகிகளாகவும் சமூகத்தின் விரோதிகளாகவும் திகழ்ந்து விலை மதிப்பற்ற உங்கள் உயிர்களை வீணாக்கிக் கொள்ளாதீர்கள்.

உங்கள் வாழ்வு, எதிர்காலம் பற்றி உங்கள் அறிவு நல்லதொரு முடிவு எடுக்காவிட்டால் எங்கள் ஆயுதங்கள் நிலையானதொரு முடிவை எடுக்கும். பேனா மையின் எச்சரிக்கை உங்கள் கண்களுக்குத் தெரியாவிட்டால், துப்பாக்கி ரவைகள் மூலம் உங்கள் காதுகளுக்குள் சொல்லித் தருவதற்காக புகை புக முடியாத இடத்திற்குள்ளும் புகுந்து வருவோம் என்றுள்ளது.

துப்பாக்கி, ரவைகள், கைக்குண்டு போன்றவற்றின் படங்கள் பொறிக்கப்பட்ட அந்தத் துண்டு பிரசுரம் சிவப்பு மையினால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய வன்னியன் படைஎன்ற பெயரில் இம்மாத முற்பகுதியில் வவுனியாவில் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டு இருந்

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரின் இருமாடிக் கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று இடம் பெறவுள்ளது.(உ)

## சங்காபிஷேகம்

(பொன்னாலை)

மூளாய் வதிரன் புலோ-ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக் கோல நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிசேகம் இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து மணிமந்திர சிம்மாசனத்தில் விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சி இடம் பெறும்.(ச-49)

## எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கு

(பொன்னாலை)

அனைத்துத் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நடுவப் பணியகத்தில் இருந்து பிரமுகர்கள் வருகை தரவிருப்பதால் அனைத்துத் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-49)

## கட்சியின்....

ந்தும் இருப்பதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் என்றும் பிரகடனம் செய்யுமாறும் அவர்கள் உயர் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹுஸைன் அகமட் பைலா, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் ஆகியோரே இம்மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா உட்பட 7 பேர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-121)

## ஜனாதிபதியும்...

இந்த நோக்கத்தினை அடைவதற்கு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் புறந்தள்ளிவிட்டு தமது கூட்டமைப்பு அரசாங்கத்தின் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்காவை பாதுகாக்கும் நடவடிக்கையில் களமிறங்கியிருப்பதாக ரணில் விக்கிரமசிங்கா குற்றஞ்சாட்டியுள்ளார். (த-121)

# கட்சித் தலைவர்கள் நாளை கூடுகின்றன[ர்]

(கொழும்பு)

அனைத்து கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று நாளை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.இதற்கான அழைப்பினை சபாநாயகர் ஜெ.என்.லொக்குபண்டார கட்சித் தலைவர்களுக்கு விடுத்துள்ளார். எதிர்க் கட்சிகள் இணைந்து பாராளுமன்ற அமர்வினை ஜுலை மாத 20ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் இது தொடர் பாகத் தீர்மானம் எடுப்பதற்காகவே இக் கூட்டத்தை ஏற்பாடு செய்[துள்]ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஏ[ப்ரல்] 2ஆம் திகதி பொதுத் தேர்[தல்] நடத்தப்பட்ட பின்னர் நான்கு [அமர்]வைகள் பாராளுமன்ற அமர்வுக[ள்] நடைபெற்ற போதிலும் அவை குழப்பத்தில் முடிந்திருந்தமை குறிப்பிடப்பட்டது

## யாழ்.அரச..

யாளப்பட்ட காசோலைகளின் பெறுமதி காசுப் பரிமாற்றம் முதலான விபரங்களைக் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கு வழங்குமாறு யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சில வங்கிகளுக்கு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.செயலகத்தில் இயங்கும் இலங்கை வங்கி முகாமையாளர், ஸ்ரான்லிவீதி, பிரதான வீதி மக்கள் வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் காங்கேசன்துறை, சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் ஆகியோருக்கே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வங்கிக் கணக்குகளைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் ஆய்வு செய்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை றான் அமைப்பின் முன்னாள் பொறியியலாளர் ப.கிரிதரன், யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் க.சண்முகநாதன் ஆகியோரின் வாக்கு மூலங்களைப் பெற்று கொழும்புக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நேற்று அறிக்கையொன்றினை நீதி வானிடம் கையளித்தனர்.(ச-19)

## ரியூசனுக்குச் சென்ற [மகன்] வீடு திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 21ஆம் திகதி வீட்டி[லி]ருந்து தனியார் கல்வி நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்ற தன மகன் இன்னமும் வீடுதிரும்பவில்லையென தந்தையொருவர் மனி[த] உரிமைகள் ஆணைக்குழுவி[ன்] யாழ்.அலுவலகத்தில் நேற்று மு[றைப்]பாடு செய்துள்ளார்.

இரண்டாம் குறுக்குத்[தெரு] கொழும்புத்துறை என்ற மு[கவரி]யைச் சேர்ந்த வரதராசா [...] (வயது14) என்ற சிறுவனே தம் காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-1)

## கூட்டம்

(பொன்னாலை)

சங்கானை பிரதேச செ[யலகப்] பிரிவில் உள்ள விளையா[ட்டுக்] கழகங்களிற்கான கூட்டமொ[ன்று] இன்று புதன்கிழமை மு.ப.11ம[ணிக்கு] சங்கானைப் பிரதேச செய[லகத்]தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.ஏ. பே[ட்]றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சகல விளையாட்டுக் கழகங்களையும் ஒ[ன்றி]ணைத்து விளையாட்டு அ[மைப்பு] ஒன்று ஒருவாக்கப் படவுள்ள[து]. இதனால் சகல கழக உறு[ப்பி]னர்களையும் தவறாது கல[ந்து] கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-49)


## உடன் தேவை

* பாதுகாப்பு ஊழியர்கள்
* பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்)
* தேநீர் தயாரிக்கும் சிற்றூழியர்கள்

விருப்பமுடையோர் 05.07.2004 திங்கட்கிழமை பிற்பக[ல்] 3.30மணிக்கு நேரில் வரவும்

நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி
15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org